Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

ஒளி - 01 - கதிர் - 331 23.03.2001 வெள்ளிக்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூபா 5/-

நகையா!
22 கரட்டில் தெரிவு
செய்ய இன்றே நாடுங்கள்
A.K.S ஜுவலர்ஸ்
பிரதான வீதி,
களுவாஞ்சிகுடி

## மட்டு தொப்பிக்கலப்பகுதியில் விமானக்குண்டு வீச்சு!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற தொப்பிக்கல பிரதேசத்தில் நேற்று போர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தியுள்ளன. சேத விபரங்கள் பற்றி தெரியவில்லை.

நேற்று காலை பேர் இரைச்சலுடன் இப்பகுதிக்கு வந்த மிக்ரக கிபீர் குண்டுவீச்சு விமானங்கள் தரவை, பெரி வட்டவான், குடும்பிமலை, குருகனா மடு விற்பனைமடு போன்ற வயற் பிரதேசங்களை வட்டமடித்த வண்ணம் தாக்குதல் நடத்தியுள்ளன. காலை தொடக்கம் பகல் பன்னிரெண்டு மணி வரை நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து இப்பகுதியில் உள்ள விவசாயிகள் அச்சமடைந்த நிலையில் பீதியுடன் பாதுகாப்புத் தேடிஓடினர்.

இதேவேளை வயல் அறுவடை மற்றும் சூடடிப்பு வேலைகளுக்காக இப்பகுதிகளுக்கு சென்ற விவசாயிகள் திரும்பிவந்தனர்.

குண்டுத் தாக்குதலையடுத்து வயற் பிரதேசங்களில்

(8ம் பக்கம் பார்க்க)

# ஏப்.24வரை போர் நிறுத்தம் நீடிப்பு
# "படைதாக்கினால் தாக்குவோம்"

## விடுதலைப்புலிகள் அறிவிப்பும், அரசுக்கு எச்சரிக்கையும்!

(நமது நிருபர்)

விடுலைப்புலிகள் போர் நிறுத்தத்தை மேலும் ஒரு மாதகாலத்துக்கு அதாவது ஏப்பிரல் 24 ஆம் திகதி வரை நீடித்திருப்பதாக நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்தனர். இலங்கை அரசும் இதற்கு ஈடாக நடந்து கொள்ள மறுத்து தொடர்ந்தும் விடுதலைப்புலிகளுக்கு எதிராக இராணுவத் தாக்குதல்களை நடத்தினால் விடுதலைப்புலிகளும் போர் நிறுத்தத்தை விட்டு ஆயுதநடவடிக்கைத் தாக்குதலைத் தொடங்க வேண்டுமென்றும் போர் நிறுத்த அறிவிப்புடன் அரசுக்கு எச்சரிக்கையும் இந்த அறிக்கை விடுத்துள்ளது.

ஒரு தலைப்பட்சமாகப் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்து வரும் கடந்த மூன்று மாத காலத்திலும் வடக்கு, கிழக்கிலோ, தென்னிலங்கையிலோ தலை நகர் கொழும்பு நகரத்திலோ எந்ததாக்குதல் நடவடிப்கையிலும் இறங்கியதில்லை என்றும் விடுதலைப் புலிகள் நேற்று வன்னியிலுள்ள அதன் தலைமை அலுவலகத்திலிருந்து விடுத்த உத்தியோபூர்வ அறிக்கைகளில் தெரிவித்துள்ளனர்.

### 3 மாதங்களில் 133 போராளிகள் மாண்டனர்

இதேபோர் நிறுத்த மூன்று மாத காலத்தில் இலங்கை இராணுவத்தின் தாக்குதல்களில் 133 போராளிகளை தாங்கள் இழந்து விட்டதாகவும் விடுதலைப் புலிகள் இந்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

தாங்கள் ஒரு நல்லெண்ண வெளிப்பாடாக ஒரு தலைப் பட்சமாக பிரகடனப்படுத்தி ஏப்ரல் 24ம் திகதி வரை நீடித்துள்ள போர் நிறுத்தத்திற்கு சாதகமாக அரசும் அதற்கு ஈடாக நடந்து கொள்ளாமல் தாக்குதல் பகை நடவடிக்கைகளைத் தொடர்ந்து வான்வெளிக் குண்டுத் தாக்குதலையும் நீடித்தால் ஒருதலைப் பட்ச போர் நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் உரிமை தங்களுக்கு இருக்கின்றதென்றும் விடுதலைப்புலிகள் தமது அறிக்கையில் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சமாதானத்தில் தமக்குள்ள நம்பிக்கையை அரசுக்கும்

(8ம் பக்கம் பார்க்க)

## கல்வி அமைச்சூடாக அனுமதி பெற்று கல்வி அதிகாரிகள் செல்ல ஏற்பாடு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிக்குச் செல்லும் கல்வி அதிகாரிகளின் பெயர் பட்டியலை கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கும் பட்சத்தில் அவற்றை பாதுகாப்பு இணைப்பதிகாரிக்கு சமர்ப்பித்து அவற்றை முன்

(8ம் பக்கம் பார்க்க)

## களுவாஞ்சிக்குடி மீன்வாடிக்குள் குண்டு வெடித்து மூவர் காயம்!

(களுவாஞ்சிக்குடி நிருபர்)

களுவாஞ்சிக்குடியில் நேற்று முன்தினம் பாரிய சத்தத்துடன் குண்டு ஒன்று வெடித்துள்ளது. களுவாஞ்சிக்குடி கடற்கரை வீதியிலுள்ள சவக்காலைக்கருகில் உள்ள மீன்வாடி வீடொன்றுக்குள்ளிருந்தே மேற்படி குண்டு வெடித்துள்ளது.

இச்சம்பவத்தின் போது மூன்று பேர் காயங்களுக்கு உள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். யோகநாதன் (30), வரதராஜன் (25) மற்றும் சாமிலன் என்ற 10 வயது சிறுவன் ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது சம்பவதினத்தன்று இரவு 8.20 மணியளவில் இரண்டு பேர்

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ்-குருநகர் கடலில் மீன்பிடிப்பதற்குப் தடை!

(யாழ் நிருபர்)

யாழ்-குருநகர் கடலில் மீன்பிடிப்பதற்குப் படையினர் நேற்றுமுதல் தடைவிதித்துள்ளனர். இத்தடையினால் மீன்பிடித் தொழிலை நம்பியுள்ள சுமார் 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என யாழ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குடாநாட்டில் கடற்தொழில் செய்வதற்கான நேரம்

(8ம் பக்கம் பார்க்க)

## நெதர்லாந்து தூதரகத்தின் முதற் செயலாளர் யாழ். பயணம்

(யாழ் நிருபர்).

நெதர்லாந்துத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் நிங்கி ரொகன் நேற்று காலை யாழ்ப்பாணத்திற்குச் சென்றுள்ளார். யாழ்ப்பாணத்திற்குச் சென்றுள்ள இவர் நேற்று காலை 10 மணியளவில் அரசாங்க அதிபர் கே.சண்முகநாதனைச் சந்தித்து தற்போதைய நிலவரம் தொடர்பாக ஆராய்ந்தார். அத்துடன் தற்போது

(8ம் பக்கம் பார்க்க)

### ஏந்திழை ஆரம்பம்

புலிகளே ஏகபிரதி நிதிகள் என்று கருதுவோர் கட்டுப்பாடற்ற பகுதிக்கு செல்லலாம்

-அமைச்சர் டக்ளஸ்-



நீங்க எப்படி பிரதிநிதியாகவும், அமைச்சராகவும் வந்தீர்கள் எண்ட சங்கதி இவங்களுக்கு விளங்காது ஐயா.....

### உள்ளே

பொருளாதாரத்தடையும்..........2
கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு...3
சோனியாவின் செயலாளர்......4
மாந்தீவு தொழுநோயாளர்.........5
பெண்விடுதலை ஆண்களின்...6
மண் அகழ்வை தடுப்பார்...7

## அதிரடிப்படையினர் ஒத்திகை !

(நமது நிருபர்)

மண்முனைத்துறையடியில் நேற்று பிற்பகல் 5மணி தொடக்கம் 5.30மணிவரை அதிரடிப்படையினர் ஒத்திகை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த ஒத்திகையால் படகுச்சேவை சுமார் அரை மணி நேரம் நடைபெறவில்லை. இதன் பின்பு 5.45 மணியளவில் படகுச் சேவை மீண்டும் இயங்கியதாக தெரியவருகின்றது.

Brilliant
Batticaloa
A/L 2003 ஆரம்பம்
24-03-2001 சனி
கல்வித் துறையில் முதன்மையும், புதுமைகளையும் உருவாக்கி வரும் தலைசிறந்த ஆசிரியர்களைக் கொண்ட எமது கல்வி நிலையம் புதிய வகுப்புக்களுடன் கை கோர்க்கிறது
LOGIC - இ. மோகன்
HINDUCULTURE - சாந்தி கேசவன்
TAMIL - அழகு-கிருபா
CHEMISTRY - கோணேஸ் றோஸ்
PHYSICS - கோவிந்தராஜா
BIOLOGY - றியாஸ்
வணிகத்துறை
வகுப்புக்களும் நடைபெறும்
ADVT

வெளிநாட்டு
வேலை வாய்ப்பு
1. முஸ்லிம், முஸ்லிம் அல்லாத வீட்டுப் பணிப்பெண்களுக்கு முற்றிலும் இலவசமாக சவூதி அரேபியாவுக்கு அனுப்பி வைக்கப்படும். வயதெல்லை 25 தொடக்கம் 40 வரை (குவைத், பஹ்ரெய்ன், ஜோர்தான் டோகா கட்டார் போன்ற நாடுகளுக்கு அனுப்பப்படும்)
2. டோகா கட்டாரிலும் உடனடி வேலைவாய்ப்பு(ஆண்களுக்கு)
*ALUMINIUM FABICATORS,
*ALUMIHIUM INSTALLER,
*ALUMINIUM FITTER,
நியூ பாஹிம் என்டர் பிரைஸஸ்
LL No 736
மட்டக்களப்பில் தொடர்புக்கு!
151/1, 151/2 பிரதானவீதி
காத்தான்குடி-02
தொ.பே:065-47090,
283/1, மெயின் வீதி,
புறக்கோட்டை
ADVT

# தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055
E-mail :- tkathir@snet.lk


## போர் மேகம் கூடுமா, கலையுமா?

இலங்கையில் மீண்டும் போர் மேகம் திரண்டு வருகிறது. ஒரு தலைப்பட்சமாகப் போர் நிறுத்தப் பிரகடனம் செய்த விடுதலைப் புலிகள் அதை மூன்று மாதகாலத்துக்கு நீடித்து நாளையுடன் மூன்றாவது மாதமும் முடிவடையவிருக்கிறது.

அரசு போர் நிறுத்தத்துக்குச் சம்மதிக்கவே இல்லை. போரைமுன்னெடுத்துச் செல்வதில் ஈடுபட்ட அரச படைகள் ஆனையிறவை மீண்டும் கைப்பற்றும் முயற்சிகளை மட்டும் நிறுத்திக் கொண்டது.

ஆனால் வடபகுதியில் பல இடங்களிலும் அரசபடைகள் தாக்குதல்களைத் தொடர்ந்தன. போர் விமானங்களின் குண்டு வீச்சும் தொடர்ந்தன.

கடந்த ஐந்து நாட்களில் அரச படையினர் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல்களை நடத்தியதாகத் தெரிவித்து பதினைந்து விடுதலைப் புலிகளைக் கொன்றதாகவும் அறிவித்திருந்தனர்.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களையும் மற்றும் சாதனங்களையும் கொண்டு சென்ற படகுகளையும் அழித்து விட்டதாகவும் தெரிவித்திருந்தனர்.

படையினர் தாக்குதல் நடத்தாத பட்சத்தில் தாங்களும் தாக்குதல் நடத்துவதில்லை என்று கூறிவந்த விடுதலைப் புலிகள் தாங்கள் தாக்கப்பட்டால் தற்பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் கூறினர்.

நேற்று முன்தினம் முல்லைத்தீவு கடலில் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்குமிடையில் நடந்த மோதலில் கடற்படையின் இஸ்ரேல் தயாரிப்பான "டோரர" படகு ஒன்று பலத்த சேதமடைந்து மூழ்கடிக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அரச படையினரும் இதை ஒப்புக் கொண்டுள்ளனர்.

இந்த மோதலில் ஏழு கடற் படையினர் கொல்லப்பட்டுள்ளனர், மற்றும் பன்னிரெண்டு பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர் என்று படைத் தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மூழ்கடிக்கப்பட்ட படகிலிருந்து தாங்கள் சில ஆயுதங்களைக் கைப்பற்றியதாகக் கூறியுள்ள விடுதலைப் புலிகள் தாங்கள் எடுத்த ஆயுதங்கள்பற்றியும் தெரிவித்துள்ளனர். தங்களது தரப்பில் மூவர் மாண்டுள்ளதாகவும் விடுதலைப் புலிகள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

கடற் சமருக்குப் பின்னர் விமானப்படைப் போர் விமானங்களும் கடற்படையினரும் வன்னி கிழக்குப் பகுதியில் பொது மக்களின் குடியிருப்புப் பகுதிகளில் எந்தவித முன்னறிவிப்புமின்றிக் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இத் தாக்குதல்களில் நான்கு அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் பதினொரு பேர் படுகாயமடைந்துமுள்ளனர். பல படகுகள் தீயில் நாசமடைந்துள்ளதுடன் வீடுகள் பலவும் தீக்கிரையாகியுள்ளன.

கடற்தொழிலையே நம்பிவாழும் இப்பகுதி ஏழைமக்கள் படையினரின் இத் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்கமுடியாமல் கையிலகப்பட்டவற்றை எடுத்துக் கொண்டு உயிரைக் காப்பாற்றுவதற்காகப் பாதுகாப்பான இடம் தேடி அலைகின்றனர்.

''தென்னைமரத்தில் தேள் கொட்டினால் பனைமரத்தில் நெறி கட்டுற மாதிரி'' கடலில் கடற்புலிகளக்கும் கடற்படைக்கும் நடந்த சண்டையில் கடற்படைக்கு ஏற்பட்ட இழப்புக்காகச் சுண்டிக்குளம் கடற்கரைப் பகுதியிலும் புதுமாத்தளம் கரையோரத்திலும் அப்பாவிகளான கடற் தொழிலாளர்களின் ஜீவனோபாயத்துக்குரிய படகுகள், அவர்கள் வசிக்கும் வீடுகள் மீது குண்ட வீசித்தாக்கி அழிப்பது எத்தகைய வீரமோ?

போக்கிரித்தனமான பேடித்தனமான இத் தாக்குதலை நடத்திவிட்டுப் பயங்கரவாதிகள் மீது தாக்குதல் நடத்தியதாக உலகுக்குப் பிரசாரம் செய்யும் ராஜதந்திரம் விசித்திரம்தான்!

விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்சமான போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து விரைவில் சமாதானப் பேச்சுவார்த்தை தொடங்கும். நாட்டின் புரையோடிப்போன இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்த மக்களுக்கு குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு பெரும் ஏமாற்றமே கிடைத்திருக்கிறது.

சமாதானத்தையே நாம் நாடியிருக்கிறோம் புலிகள்தான் அதற்கு எதிராக நிற்கிறார்களென்று பிரசாரம் செய்து விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று உலக நாடுகள் தடைசெய்வதன் மூலம் போராளிகளை அடக்கி ஒடுக்கிவிடலாமென்ற அரசுக்கும் முல்லைத்தீவுக் கடற்சமரில் கடற்படைப் படகுகள் மூழ்கடிக்கப்பட்டதன் மூலம் விடுதலைப் புலிகள் ஏமாற்றத்தையே ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

சமாதானப் பேச்சைத் தள்ளிப்போட்டு மீண்டும் போரைத் தொடங்க வேண்டுமென்ற பேரினவாதிகளினதும் அரசினதும் நமைச்சலுக்கு வன்னிமீதும் கிழக்கில் மட்டக்களப்பு தொப்பிகல மலைச்சாரல் பகுதியிலும் நேற்று விமானப்படைகள் நடத்திய தாக்குதல்கள் தீனிபோட்டிருக்கிறது.

''குனியக் குனியக் குட்டுகிறவன் மடையன் குட்டக் குட்ட குனிகிறவனும் மடையன'' என்பதை விடுதலைப்புலிகள் புரிந்து கொண்டுபொறுமையை இழந்து விட்டதாகவே தோன்றுகிறது.

இதே சமயம் இந்தியா புலிகளைத் தடைசெய்த பின்னரும் அமெரிக்கா தடைசெய்த பிறகும் கூட விடுதலைப் புலிகள் முடங்கிவிடவில்லை. இப்பொழுது பிரித்தானியாவில் தடை செய்வதற்குச் சட்டம் கொண்டுவந்து விட்டதாலோ உலக நாடுகளின் தலைவர்கள் ஜனாதிபதியுடன் கூட்டறிக்கை விடுவதாலோ விடுதலைப் போராட்டம் அடங்கிவிடுமா?

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் எங்கே இருந்து வருகின்றன என்பதைப் பற்றிக் குடைந்து அதைத் தடுப்பதற்காக தடைசெய்யும் அரசுக்கு ஆயுதங்கள் படைகளிடமிருந்தே எடுக்கிறார்களென்பது தெரியாமலிருப்பதும் என்னதான் நடவடிக்கை எடுத்தாலும் படைகளைப் பெருக்கினாலும் மனோவலிமைதான் பெரிய பலம் என்பதை உணர்ந்து கொள்ளாததும்தான் பெரும் குறை.

இந்த ''டோரா'' படகின் இழப்புடனாவது சமாதானப் பேச்சவார்த்தையை இனியும் தாமதிக்காது போர் மேகம் கூடாமல் தடுப்பது அவசியம்.

# பொருளாதாரத் தடையும் கனரக ஆயுதமும் நிரூபிக்கும் உண்மை

**ஜெனீவாவில் நடைபெறும் 57வது ஐ.நா மனித உரிமைக் கூட்டத் தொடரின் தலைவருக்கும், பிரதிநிதிகளுக்கும் பிரித்தானியா மஞ்செஸ்டரிலுள்ள மனித உரிமைகளுக்கான தமிழ் நிலையம் அனுப்பியுள்ள மனு இங்கு தரப்படுகிறது.**

சென்ற வருடம் நடைபெற்ற 56வது ஐ.நா மனித உரிமைக் கூட்டத் தொடருக்குச் சமூகமளித்து உரையாற்றிய ஐ.நா மனித உரிமை ஆணையாளர் திருமதி. மேரி றொபின்சன் அவர்கள், ஐ.நாவினால் முன்பு செய்யபபட்ட கவலையீனத் தவறை மிகவும் கவலையுடன் கூறியிருந்தார். அதாவது, கொலை, தன்னிச்சையான படுகொலைகளுக்குப் பொறுப்பான ஐ.நா பிரதிநிதி 1993ஆம் ஆண்டு ருவாண்டாவில் நடக்கவிருந்த படுகொலைகள் பற்றி முன்னெச்சரிக்கை செய்த போது, யாரும்அதைப் பெரிதுபடுத்தவில்லை. கடைசியில் ருவாண்டாவில் ஆயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் எனக் கூறியிருந்தார்.

இதே பிரதிநிதி சிறீலங்காவிற்கு, 1997ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் விஜயம் செய்துவிட்டுச் சமர்ப்பித்த அறிக்கையில் சிறீலங்கா எதிர்நோக்கும் அபாயம் பற்றி எழுதியிருந்தார். ஆனால் இவ்வறிக்கையை இன்று வரை யாரும் பெரிதுபடுத்தாமல் இருப்பது மிகவும் கவலைக்குரியது!தமிழர் மனித உரிமைகள் மையம் - கடந்த காலங்களில் பல தடவை சிறீலங்காவில் தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள அபாயம் பற்றி அறிக்கைகள் மூலம் வெளிக்கொண்டு வந்திருந்தோம்.

சிறீலங்கா அரசு சர்வதேசப் பத்திரிகையா ளர்களையும், வெளிநாடுகளின் சில முக்கிய பிரதிநிதிகளையும், மனித உரிமைக் கூட்டங்கள், மாநாடுகள் என்ற பெயரில் சிறீலங்காவிற்கு அழைத்து, தமிழ் மக்கள் மீதான தமது மனித உரிமை மீறல்களை, இவர் மூலம் பிரச்சாரம் செய்து மூடிமறைக்கின்றார்கள். அத்துடன், பத்திரிகைத் தணிக்கையை நடைமுறைப்படுத்துவதன் மூலம், உண்மைச் செய்திகள் சுதந்திரமாக வெளிநாடுகளைச் சென்றடையமுடியாது தடுக்கப்படடுள்ளது.

**பல வடிவங்களில் நடைபெறும் இன அழிப்பு**

சிறீலங்காவைப் பொறுத்தவரையில் இனஅழிப்பு பல்வேறுபட்ட வடிவங்களில் நடைபெறுகின்றது.

முதலாவதாக: சிறீலங்காவின் அரசியலமைப்பில் தமிழ் மக்களுடைய அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன.

இரண்டாவதாக: 27 வருடகாலமாக நடைமுறையில் உள்ள சட்டமும் (PTA) தொடர்ந்து வந்த அவசரகாலப் பிரகடனமும் தமிழ் மக்களை கைதுசெய்ய, சித்திரவதை செய்ய, பாலியல் வல்லுறவில் ஈடுபடுத்த, கொலை செய்ய அரச படைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

"பயங்கரவாதத்திற்கு" எதிரான நடவடிக்கை என்ற பெயரில் வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர், சமயத் தலைவர்கள் தொடர்ந்து கொலை செய்யப்படுகின்றனர்.

மூன்றாவதாக: கடந்த 10 வருடத்துக்கு மேலான பொருளாதாரத் தடை மூலம் தமிழ்ப் பிரதேசங்களுக்கு உணவு, மருந்து மற்றும் அவசர பொருட்கள் தடை செய்யப்பட்டுள்ளன.

தற்போது ஈராக், லிபியா முன்பு தென்ஆபிரிக்கா போன்ற நாடுகள் மீதான பொருளாதாரத் தடைகள், ஐ.நா.வினால் சில அழுத்தங்களை அந்நாடுகள் மீது திணிப்பதற்காக கொண்டு வரப்பட்டவை. ஆனால், தமிழர்களின் தாயக பூமி மீது கொண்டு வரப்பட்ட பொருளாதாரத் தடை "தனது சொந்தப் பிரஜைகள்" என சிறீலங்கா அரசு முதலைக் கண்ணீர்விடும் தமிழ் மக்கள் மீதானதே!

**தடையும் ஆயுதங்களும் நிரூபிக்கும் பிரச்சினை**

உலகின் பல பாகங்களில், பல நாடுகளில் இனப்பிரச்சினைகள் நடைபெறு கின்றன. ஆனால், தனது சொந்தப் பிரஜைகள் என்று சொல்லிக் கொண்டு பொருளாதாரத் தடைகளை அமுல்படுத்தி மக்கள் பட்டினிச் சர்போன்ற இன்னல்களுக்கு ஆளாக்கப்படுவது சிறீலங் காவில் மட்டுமே நடைபெறுகிறது!

இதேவேளை, அண்மைக் காலங்களில் சிறீலங்கா அரச படைகளினால் பாவனைக்குள்ளாக்கப்பட்டுள்ள கனரக ஆயுதங்கள் யாவும் இரு நாடுகளுக்கிடையான யுத்தத்திற்குப் பாவிக்கப்படுபவையே. ஆகையால், சிறீலங்காவில் அமுல் செய்யப்பட்டுள்ள பொருளாதாரத் தடையும், பாவனைக்குள்ளாக்கப்பட்டுள்ள கனரக ஆயுதங்களும் நிச்சயம் சிறீலங்காவில் நடைபெறும் இனப்பிரச்சினையை ஓர் உள்நாட்டுப் பிரச்சினை அல்லவென நிரூபித்துள்ளது.

நான்காவதாக: சிறீலங்கா அரசினால் மற்றைய நாடுகளுடன் கைச்சாத்திடபபட்டுள்ள "அகதிகள் நாடு கடத்தல்" ஒப்பந்தங்கள். இதன்மூலம் சிறீலங்கா அரசின் மனித உரிமை மீறல்களை சர்வதேசரீதியில் நியாயப்படுத்துவது மட்டுமல்லாமல், வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களை பலாத்காரமாக சிறீலங்காவிற்கு நாடுகடத்துவதுடன், சர்வதேசரீதியில் தமிழ் மக்களைத் துன்புறுத்துகின்றது.

அண்மைக்காலங்களில் சர்வதேசரீதியில் வெளியான செய்திகளின் பிரகாரம், சிறீலங்காவின் மனித உரிமை மீறல்களை சர்வதேசரீதியில் எடுத்துரைக்கும் மேற்கு நாட்டவர்களும் தமிழர்களும் அடங்கிய 63 பேரை கொலை செய்வதற்கு சிறீலங்காவின் கையாட்களினால் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு சிறீலங்காவின் வெளிநாட்டு அமைச்சின் ஆதரவு உள்ளது என பத்திரிகைகள் தெரிவிக்கின்றது. இச் செய்தியை இன்றுவரை சிறீலங்காவின் வெளிநாட்டு அமைச்சு மறுக்கவில்லை!

மதிப்பிற்குரிய பிரதிநிதிகள், இன்றுவரை தமிழீழ விடுதலைப் புலிகளினால் பிரகடனப்படுத்தப்பட்ட மூன்று மாதகால ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை, சர்வதேசரீதியில் சமாதானத்தை விரும்புவதாகக் காட்சியளிக்கும் சிறீலங்கா அரசு ஏற்க மறுத்துள்ளது. இப் போர்நிறுத்தத்தை ஏற்குமாறு பத்து தமிழ் அரசியல் கட்சிகள் சிறீலங்கா அரசிற்கு வேண்டுகோள் விடுத்த போதும், சிறீலங்கா அரசு இதை ஏற்க மறுத்து தனது இராணுவ நடவடிக்கையை தொடர்கின்றது.

சிறீலங்கா அரசைப் பொறுத்தவரையில், தனது மனித உரிமை மீறல்களைச் சமாளிக்கும் நோக்குடன் ஐ.நா. மனித உரிமைக் கூட்டத்தொடர் தொடங்குவதற்குச் சில வாரங்களிற்கு முன்னர் தாம் ஏதோ நடவடிக்கை எடுப்பதாக கபட நாடகம் ஆடுவது வழக்கமாகி வந்துள்ளது. இவற்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர நாம் கடமைப்பட்டுள்ளோம்.

வழக்கறிஞரும், மனித உரிமையாளருமான திரு. குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்டு ஒருவருடத்திற்கு மேலாகியும், இன்றுவரை கொலையாளியைக் கண்டுபிடிக்க சிறீலங்கா அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை மிகவும் ஆழ்ந்த கவலையுடன் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம். நிச்சயமாக இக் கூட்டத்தொடரில் சிறீலங்காவின் மனித உரிமை மீறல்கள் பற்றி கவனத் திற்கு எடுக்கவேண்டுமென மிக தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இத்துடன் ஓர் விபரங்கள் அடங்கிய அறிக்கையையும், கழுத்துறைச் சிறைச்சாலையில் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள 494 தமிழ் இளைஞரின் பெயர் பட்டியலையும் கவனத்திற்கு சமர்ப்பித்திருப்பதாகவும் நிலையத்தின் செயலாளர் ச.வி.கிரு பாகரன் இந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குச் செல்ல ஆசிரியர் மாணவர்கள் கிராம சேவையாளருக்கு கட்டுப்பாடில்லை

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்க அதிகாரிகள் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குச் சென்று வருவதில் அமுல்படுத்தப்பட்டு வந்த நடைமுறையில் மாற்றங்கொண்டுவரப்படவுள்ளதாக மாவட்ட சிவில் விவகார இராணுவ இணைப்பதிகாரி லெப்டினன் கேர்ணல் எஸ்.எல்.குணசேகர தெரிவித்தார்.

ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் கிராமசேவை அதிகாரிகள் பயணம் செய்வதில் எவ்வித கட்டுப்பாடும் கிடையாது. ஏனைய அதிகாரிகளுக்கான திணைக்களங்கள் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பிரசேதங்கள் அமைந்துள்ளது. இதனால் திணைக்கள அதிகாரிகள் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குச் செல்லப் பாதுகாப்பு அனுமதி பெறவேண்டுமென்ற நடைமுறையில் எந்தவித மாற்றமும் இல்லை. ஆனால் அடிக்கடி விண்ணப்பம் செய்வதில் சிரமம் ஏற்படுமாயின் மூன்று அல்லது ஆறு மாதங்களுக்கான நிகழ்ச்சி நிரல் திணைக்களத் தலைவர் மூலமாகச் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ள முடியும் ஏன்று இராணுவ இணைப்பதிகாரி மேலும் கூறினார்.

பாதுகாப்புத் தரப்பினரிடம் முன் அனுமதி பெறாது பாடசாலை மேற்பார்வைக்காகச் சென்றிருந்த கல்வித் திணைக்கள அதிகாரிகள் செங்கலடி கறுத்தப்பாலம் சோதனைச் சாவடியில் திருப்பியனுப்பப்பட்டமை குறித்து ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனவே, இந்த விவகாரம் தொடர்பாக பொருத்தமான தீர்வொன்றைக் காணுமாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா கேட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்க திருகோணமலை மாவட்ட கிளையின் தொழிற்சங்க நிர்வாகிகள் தெரிவு

(மருதமுனை நிருபர் நழீம் எம்.பதுார்தீன்)

மேற்படி எமது தொழிற்சங்கத்தின் திருகோணமல்லை மாவட்டக் கிளையின் 4வது வருடாந்த நிருவாகிகள் தெரிவு 21.01.2001ம் திகதி மாவட்ட இணைப்பாளர் என்.சத்தியமோகன் தலைமையில் திருமலை விக்னேஸ்வரா இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் தலைமைச் செயலகச் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன், பொதுச் செயலாளர் க.நடராஜா ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் கீழ்காணும் நிருவாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். எனவே எமது தொழிற்சங்க நடவடிக்கைகளில் தங்களின் பூரண ஒத்துழைப்புக்களை வழங்கும்படி மிகவும் பணிவுடன் வேண்டுகின்றோம்.

**புதிய நிர்வாகிகள் தெரிவு விபரம்:**

| பெயர் | பதவி | முகவரி |
| --- | --- | --- |
| என்.சத்தியமோகன் | திருமலை மாவட்ட இணைப்பாளர் | உட்கட்டமைப்பு அபிவிருத்தி அலுவலகம், திருமலை. |
| து.நாகேஸ்வரன் | மாவட்டக் கிளைச் செயலாளர் | மாகாணக்கல்வித் திணைக்களம், திருகோணமலை. |
| எம்.யோகராசா | செயற்குழு உறுப்பினர் | பிரதேச செயலகம், திருகோணமலை. |
| ஏ.நடராஜா | செயற்குழு உறுப்பினர் | வீதி அபிவிருத்தித் திணைக். திருகோணமலை. |
| எம்.பெருமாள் | செய்ற்குழு உறுப்பினர் | முதலமைச்சர் செயலகம், திருகோணமலை. |
| ஜி.அன்ரனிதாஸ் | செயற்குழு உறுப்பினர் | மோட்டார் போக்குவரத்து திணைக்களம், திருகோணமலை. |
| எஸ்.நிலாம்டீன் | செயற்குழு உறுப்பினர் | வீதி அபிவிருத்தி திணைக்களம், திருகோணமலை. |
| ஏ.அமலாஸ் | திருமலை பிரதேச இணைப்பாளர் | உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திணைக்களம், திருமலை. |
| திருமதி.எஸ்.சிவமணி | செயற்குழு உறுப்பினர் | சுகாதார அமைச்சு, திருகோணமலை. |

# 7வது வருடாந்த மகா நாடு

(மருதமுனை நிருபர் நழீம்.எம்.பதுார்தீன்)

எமது தொழிற்சங்கத்தின் 7வது வருடாந்த மகாநாடு எதிர்வரும் 31.03.2001ம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இம்மகாநாட்டிற்கு சகல உறுப்பினர்களும் சமூகமளிக்குமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றார்கள். புதிதாக சேரவிருக்கும் அங்கத்தவர்களையும் பழைய உறுப்பினர்கள் அழைத்து வருவதோடு அவர்களை அறிமுகப்படுத்தி எங்களோடு இணைந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தொழிற்சங்கத்தின் இணை நிறுவனமான ஜீவோதய நலன்புரி நிறுவனத்தின் பணிப்பாளர் சபைத் தெரிவும் இதனோடு இணைந்து நடைபெறவுள்ளதால் தயவு செய்து சகல உறுப்பினர்கள் தம்பதிகள், சமேதரராய் சமூகமளிக்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். திருமணமாகாத தோழர்கள், சகோதரி சகிதம் சமூகமளித்தால் ஜீவோதய நலன்புரி நிறுவனம் அமைக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்ற ஏதுவாய் இருக்கும். சனிக்கிழமை விடுமுறை தினத்தில் கடமையாற்ற வேண்டிய நிற்பந்தத்தில் உள்ளோர் தயவு செய்து 04.03.2001 ஆம் திகதியிடப்பட்ட பொ.நி.சு. நிருபம் 19/96 (1) இன் இலக்கப் பிரகாரம் கடமை லீவு பெற்றுவருமாறு கோரப்படுகின்றீர்கள்.

தோழர்கள் தவறாது இவ்வாண்டு விழாவிலே கலந்து கொண்டு தொழிற்சங்கப் பணிகளைத் தொடர ஆக்கமும் ஊக்கமும் வழங்குமாறு அன்புடன் வேண்டுகிறோம் என பொதுச்செயலாளர் கே.நடரா்சா அறிவித்துள்ளார்.

# இன்று ஆர்ப்பாட்டம்

(காரைதீவு நிருபர்)

ஆப்பானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் புத்தர் சிலைகளை உடைத்தமைக்கு எதிராக இலங்கை சுதந்திர அமைப்பு இன்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டமொன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

குத்பா தொழுகையின் பின்பு சாய்ந்தமருது பெரியபள்ளி வாசலின் முன்றில் இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற ஏற்பாடு செய்துள்ளதாக அமைப்பின் அரசியல் பீட தலைவர் எம்.எம்.ஜுனைதீன் தெரிவித்தார்.


நாளைய தினக்கதிரில்.........

வணிகக் கல்வி முன்னணி ஆசிரியர்

கே.கே.அரஸ்

எழுதும்

வணிகமும் இன்றைய போக்கும்

BRILLIANT :- மட்டக்களப்பு கல்முனை

IDEAL :- அக்கரைப்பற்று

உங்கள் பிரதிகளுக்கு முற்கூட்டியே சொல்லி வையுங்கள்


# செய்திச்சுருக்கம்

## மாணவி மீது பாலியல் வல்லுறவு. கல்வி அதிகாரி இடை நிறுத்தம்

கண்டியைச் சேர்ந்த தமிழ்க் கல்வி அதிகாரி ஒருவர் 9 வயது சிறுமியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதான குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம் அவரை சேவையிலிருந்து இடை நிறுத்தம் செய்துள்ளது.

கண்டி மாவட்டத்தின் பள்ளேகலை பகுதியில் அமைந்துள்ள இக் கல்வி அதிகாரியின் வீட்டுக்கு இச்சிறுமி பிரத்தியேக வகுப்புக்குச் சென்றபோதே இவர் இச்சிறுமியைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சிறுமியை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்திய கண்டி வைத்தியசாலை வைத்தியரும் சிறுமியின் பெற்றோரும் இது தொடர்பாக கண்டி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததை அடுத்து கண்டி பொலிஸாரின் புணிப்புரைக்கிணங்க பொலிஸார் இதனை விசாரணை செய்யும் பொறுப்பை ஏற்றனர்.

இதனையடுத்து மெனிக்கின்ன பொலிஸார் சம்பந்தப்பட்ட சிறுமியை விசாரணை செய்த பின்னர் கல்வி அதிகாரியைக் கைது செய்தனர். அவரைப் பொலிஸார் விசாரணைக்குட்படுத்திய போது அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்கு மூலம் அளித்ததாக தெரிய வருகிறது. இதனையடுத்து பொலிஸார் இவரை நேற்றுமுன்தினம் கண்டி மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நீதவான் லியோன் செனவிரட்ண முன்னிலையில் ஆஜர் செய்தபோது நீதவான் அவரை 30ம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## கடத்தப்பட்ட இளைஞன் சடலமாக மீட்பு

வவுனியா மகா இறம்பைக் குளம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை சடலமாக மீட்கப்பட்ட இளைஞன் பேரம்பலம் றொசான் (வயது 25) என அடையாளம் காணப்பட்டுள்ளான். பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தைச் சேர்ந்த இந்த இளைஞன் சில தினங்களுக்கு முன்னர் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்பட்டிருந்தார்.

மகா இறம்பைக்குளம் முந்திரிகை காட்டுப்பகுதியில் இருந்து மீட்கப்பட்ட இவ் இளைஞனின் சடலத்தில் ஐந்து துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை பூந்தோட்டம் நலன்புரி நிலையத்திலிருந்து கடந்த திங்கட்கிழமை இரவு ஜெயசீலன் என்ற இளைஞரும் இனம் தெரியாத ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

## 1500 மீனவக் குடும்பங்கள் பாதிப்பு

வல்லைக்கடல் ஏரியில் மீன் பிடிப்பதற்கு படையினர் தடை விதித்துள்ளதால் சுமார் 1500 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கரவெட்டி சிந்தாமணி விநாயகர் மீனவர் கூட்டுறவுச் சங்கம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வடமராட்சி கிழக்குப் பகுதிக்கருகில் இருந்து இடம் பெயர்ந்துள்ளவர்கள் மற்றும் வல்லைக்கடல் ஏரியைச் சூழவுள்ளவர்கள் இங்கு கட்றறொழில் செய்து வருகின்றனர்.

வல்லைக்கடல் ஏரிப்பகுதியான மண்டான்ட, வல்லை, ஆபச்சந்தி, வாணி, மருதங்கேணி, செம்மியன்பற்று உன்னிட்டகால் ஏரியில் டிசம்பர் முதல் ஏப்ரல் வரையான காலத்தில் இறால் அதிகமாகப் பிடிக்கப்படுவது வழமை.

அத்துடன் வீச்சுவலை மீன்பிடித் தொழிலில் இங்கு ஈடுபட்டுவரும் கரவெட்டிப்பகுதி மீனவர்களும் இத்தடையினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 5 உள்ளூராட்சி உறுப்பினர் நீக்கம்

ஐந்து உளளூராட்சி உறுப்பினர்களைக் கட்சியிலிருந்து நீக்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முடிவு செய்துள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய நிறைவேற்றுக் குழுக்கூட்டம் செவ்வாய்க்கிழமை பிரதமர் தலைமையில் இடம் பெற்றபோது இந்த முடிவு எடுக்கப்பட்டது. கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதற்காகவே இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதாக கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

மொரட்டுவ, வத்தளை, மாபொளை, குருநாகல் ஆகிய உளளூராட்சி சபைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களுக்கே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## சபை செய்திகளை ஒளிபரப்ப ஐ.ரி.என்னுக்குத் தடை!

பாராளுமன்றம் தொடர்பான செய்திகளை சேகரிக்கவும் ஒளிபரப்புவதற்கும் ஐ.ரி.என் தொலைக்காட்சிக்கு 5 நாட்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க இந்தத்தடை உத்தரவை நேற்று அறிவித்தார். சபை நடவடிக்கைகள் நேற்று முன்தினம் நடந்து கொண்டிருந்தபோது காலை 10.15 அளவில் சபாநாயகர் இதனைத் தெரிவித்தார். ஐ.தே.க. எம்பிக்கள், ஏ.எச்.எம்.அஸ்வர் லொக்குபண்டார ஆகியோரின் பாராளுமன்ற உரைகள் ஐ.ரி.என்.தொலைக்காட்சியில் திரிபு படுத்தப்பட்டு ஒளிபரப்பப்பட்டதாகக் கூறி சிறப்புரிமை மீறல் பிரச்சினையொன்றை இருவரும் எழுப்பியிருந்தனர்.

இதனையடுத்து சபாநாயகர் மேற்படி தீர்ப்பை நேற்று முன்தினம் வழங்கினார். இதற்கமைய நேற்றிலிருந்து ஐந்து நாட்களுக்கு பாராளுமன்றம் தொடர்பான செய்திகளை ஐ.ரி.என். ஒளிபரப்ப முடியாது.

# பெர்னாண்டஸ் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டு புகாருக்கு கடற்படை தளபதி பதில்

(புதுடெல்லி)

இஸ்ரேலிடம் இருந்து ஏவுகணை எதிர்ப்பு ஆயுதங்கள் வாங்கியதில் எந்த விதி முறையும் மீறப்படவில்லை என்று ஜார்ஜ்பெர்னாண்டஸ் மீது டெஹல்கா டேப் வெளியிட்ட குற்றச்சாட்டுக்கு கடற்படை தளபதி பதில் அளித்து உள்ளார். இந்திய கடற்படை போர் கப்பல்களில் பொருத்துவதற்கு தேவையான ஏவுகணை அழிப்பு சாதனங்களை இஸ்ரேலிடம் இருந்து வாங்குவதில் ராணுவ மந்திரி ஜார்ஜ் பெர்னாண்டஸ் முறைகேடு செய்ததாகவும், பிரதமரின் அறிவியல் ஆலோசகர் அப்துல் கலாமின் ஆலோசனையை மீறி இந்த ஆயுதங்களை வாங்க பெர்னாண்டஸ் ஒப்புதல் அளித்ததாக டெஹல்கா டேப் தகவல் வெளியிட்டு இருந்தது.ராணுவ மந்திரி பதவியை ராஜினாமா செய்யும் போது பெர்னாண்டஸ் வெளியிட்ட அறிக்கையில் இந்த குற்றச் சாட்டை மறுத்தார். ரூ.700 கோடி மதிப்பிலான இந்த பேரத்துக்கு அறிவியல் ஆலோசகர் அப்துல்கலாம் ஒப்புதல் தந்திருந்தார் என்று விளக்கம் அளித்தார்.இப்போது கடற்படை தலைமை தளபதி அட்மிரல் சுஷில் குமாரும், பெர்னாணடசுக்கு ஆதரவாக பேட்டி அளித்துளளார். டெல்லியில் நேற்று கடற்படை விருது அளிப்பு விழாவில் கலந்து கொண்ட அவர் இதுகுறித்து நிருபாகளிடம் கூறியதாவது:- இஸ்ரேலின் பராக் ஏவுகணை எதிர்ப்பு ஆயுதங்களை இந்திய கடற்படைக்கு வாங்க வேண்டும் என்ற முடிவு ஜார்ஜ் பெர்னாண்டஸ் பொறுப்பு ஏற்பதற்கு முன்பே 1998-ல் எடுக்கப்பட்டு விட்டது. கடல் வழியாக பாய்ந்து வரும் ஏவுகணைகளை தாக்கி அழிக்க கூடிய இந்த ஆயுதங்கள் ஒன்பது அல்லது பத்து ஆண்டுகளுக்கு முன்பே பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு விட்டது. இந்த சோதனையின் முடிவு கடற்படைக்கு திருப்தி அளித்தது. ராணுவ ஆராய்ச்சி அபிவிருத்திக் கழகமும் 1977-ல் இதற்கு ஒப்புதல் அளித்தது. இப்போது இந்த ஏவுகணை எதிர்ப்பு ஆயுதங்கள் இந்திய கடற்படையின் விமானம் தாங்கி கப்பலான ஐ.என்.எஸ். விராட்டில் பொருத்தப்பட்டு உள்ளன. நமது உள்நாட்டு தயாரிப்பான திரிசூல் ஏவுகணையை இந்த கப்பலில் பொருத்துவது பற்றியும் பரிசீலனை நடந்து வருகிறது. அதற்கு முன் அவற்றை இன்னும் பலதடவை பரிசோதிக்க வேண்டி உள்ளது.தற்போது டெஹல்கா டேப் வெளியிட்டுள்ள விவகாரம் ராணுவ அமைப்புக்கு ஆச்சரியத்தை தந்துளளது. மூத்த அதிகாரிகள் மனதில் இது சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ள போதிலும் கடற்படையின் செயல்பாட்டை ஒரு போதும் பாதிக்காது.



கான்பூர் கலவரம் தொடர்பாக டெல்லியில் அனைத்து கட்சிகளையும் சேர்ந்த முஸ்லிம் பிரதிநிதிகள் பிரதமர் வாஜ்பாயை சந்தித்து உரையாடினார்கள். பிரதமருடன் அவர்கள் உரையாடிய காட்சியை படத்தில் காணலாம்.

## நிமோனியா காய்ச்சலில் 12 பேர் மரணம்


(கத்மாண்டு)

நேபாளத்தில் நிமோனியா காய்ச்சலினால் 12பேர் மரணமடைந்துள்ளனர். இந்த மரணம் ஒரு மாதத்திற்குள் நடந்துள்ளது. நிமோனியா காய்ச்சல் நேபாளத்தில் வேகமாகப் பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் காய்ச்சலினால் மரணமடைந்தவர்களில் மூன்று பேர் ஐந்து வயதிலும் குறைந்த சிறுவர்கள் ஆகும். நிமோனியா திபெத்தின் எல்லையிலுள்ள லாபாகார் என்ற கிராமத்திலேயே அதிகம் பரவியுள்ளதாகக் கூறப்படுகிறது.

## உலக வலம்

தொகுப்பு :- பௌஸி



போலி ஆயுத பேர விவகாரம் இன்னும் ஓயவில்லை. பாராளுமன்ற வளாகத்தில் ஆளும் கட்சி எம்.பி.க்களும். எதிர்க்கட்சி எம்.பி.க்களும் ஒருவரையொருவர் நோக்கி கோஷம் போட்ட காட்சி.

# சோனியாவின் செயலர் ஜார்ஜ் மீது வழக்கு; பல கோடி ரூபாய் சொத்து பறிமுதல்

(புதுடில்லி)

வருவாய் மீறி சொத்து குவித்ததாக சோனியாவின் தனிச் செயலாளர் ஜார்ஜ் மீது சிபிஐ. வழக்கு பதிவு செய்து உள்ளது. அவரிடம் இருந்து பலகோடி ரூபாய் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. காங்கிரஸ் தலைவி சோனியாவின் தனிச் செயலாளர் வின்சென்ட் ஜார்ஜ். கேரளாவைச் சேர்ந்தவர். தமிழ் நாட்டைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவர்கள் பலருக்கு நெருக்கமானவர். காங்கிரசில் பதவி விரும்புபவர்கள் இவரைப் பார்த்தால் போதும் என்ற அளவுக்கு கொடிகட்டிப் பறப்பவர். தற்போது இவர் மீது சிபிஐ. சொத்துக் குவிப்பு வழக்கு தொடர்ந்து உள்ளது. வருவாய்க்கு அதிகமாக சொத்துக்கள் குவித்து இருப்பதாக அதில் கூறப்பட்டு உள்ளது. டெல்லி சி.பி.ஐ. தனி நீதிமன்றத்தில் இந்த வழக்கு நேற்று தொடரப்பட்டது. அவரிடம் நடத்திய சோதனையில் பல கோடி ரூபாய் சொத்துக்களை கைப்பற்றி இருப்பதாக சி.பி.ஐ. வட்டாரங்கள் கூறின. ஜார்ஜ் 1984-ம் ஆண்டு முதல் 1990-ம் ஆண்டு வரை அரசு ஊழியராக இருந்தார். இந்த கால கட்டங்களில் பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மறைந்த ராஜீவ் காந்தியின் தனிச் செயலாளராக பணியாற்றினார். அமுலாக்கப்பிரிவு முன்னாள் துணை இயக்குநர் அசோக் அகர்வால் கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டார். இவர் ஜார்ஜின் நெருங்கிய நண்பர். இதன் மூலம் தனது செல்வாக்கை அகர்வால் வளர்த்துக் கொண்டார். சிபிஐ. பிடியில் சிக்கிய பிறகு அவர் தெரிவித்த தகவலின் அடிப்படையில் ஜார்ஜ் மீது கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் கட்ட விசாரணை நடந்தது. இப்போது அதற்கான ஆதாரங்கள் திரட்டப்பட்டு முதல்தகவல் அறிக்கை தாக்கல் செய்யப் பட்டது என்று சிபிஐ. வட்டாரங்கள் தெரிவித்தன. சிபிஐ. முதல் தகவல் அறிக்கையில் கூறி இருப்பதாவது:- ராஜீவ்காந்தி தனிச் செயலாளராக ஜார்ஜ் இருந்த போது 1984-ம் ஆண்டு முதல் 1990-ம் ஆண்டு வரை 3 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்து சேர்த்து இருந்தார். அவர் அரசு பணியில் இருந்து விலகிய பிறகு தான் இந்த சொத்து குவிப்பு விவகாரம் வெளி வந்தது. தனது பெயரிலும் மனைவி லில்லி ஜார்ஜ், குழந்தைகள் டென்னிஸ் ஜார்ஜ், பிரியனா ஜார்ஜ் ஆகியோர் பெயரிலும் பினாமி பெயரிலும் பல சொத்துக்களை ஜார்ஜ் வாங்கி இருக்கிறார்.இந்த சொத் துக்கள் பற்றி விசாரணை நடத்திய போது ஜார்ஜ் சரியான பதில் தர வில்லை. அவரது மனைவியிடம் 6 முறை சி.பி.ஐ. விசாரணை நடத்தியது. அப்போதும் உரிய விளக்கம் பெற முடிய வில்லை. ஜார்ஜுக்கு டெல்லியில் ஒரு பங்களா. 5 ஏக்கர் பரப்பில் ஒரு பிளாட். கடைகள். உறவினர் வசந்த் குஞ்ச் பெயரில் ஒரு பிளாட், பெங்களூரில் ஒரு பிளாட், சென்னையில் விவசாய நிலம், டெல்லியில் உலக வர்த்தக டவர் பகுதியில் மனைவி பெயரில் பிளாட் மற்றும் கடைகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. மேலும் பினாமி பெயரிலும் சொத்துக்கள் இருப்பது தொரிவந்தது..

# த.மா.காவிலிருந்து சிதம்பரம் நீக்கம்.

(சென்னை)

ப.சிதம்பரம் த.மா.கா. ஜனநாயக பேரவை என்ற அமைப்பை தொடங்கினார் அல்லவா? இதை தொடர்ந்து அவர் மீது நடவடிக்கை எடுக்க மூப்பனார் தலைமையில் த.மா.கா. செயற்குழு அவசரமாக கூட்டப்பட்டது. இதில் கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டி ப.சிதம்பரம் மற்றும் அவருடைய ஆதரவாளர்களை தற்காலிக நீக்கம் செய்வது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. த.மா.கா. அவசர செயற்குழு கூட்டம் நேற்று சத்திய மூர்த்தி பவனில் நடந்தது. கூட்டத் துக்கு மூப்பனார் தலைமை தாங்கினார். தனி அமைப்பு அமைப்பதும், தேர்தல் நேரத்தில் த.மா.கா. அணியின் எதிரணித் தலைவரோடு சேர்ந்து தேர்தல் வியூகம் அமைப்பதும் கடும் கட்சி விரோத நடவடிக்கையாக த.மா.கா. கருதுகிறது. கட்சியின் கண்ணியத்திற்கும், மரியாதைக்கும் இழுக்கு தேடும் முறையில் நடந்து கொள்வது, கட்சி, அமைப்புகளுக்கு எதிராக அல்லது அவைகளின் நிர்வாகிகளுக்கு எதிராக பிரசாரம் செய்வது போன்ற நடவடிக்கைகள் ஒழுங்கு மீறல் நடவடிக்கையாக நமது கட்சி விதிகள் கூறுகின்றன. எனவே ப.சிதம்பரம் மற்றும் அவரோடு சேர்ந்தவர்களின் சமீப கால செயல்பாடுகள் த.மா.கா.வின் ஒழுங்கு விதிகளை மீறியதற்கான பூர்வாங்க ஆதாரங்களோடு திகழ்வதால் அவர்களை இடைக்கால நீக்கம் செய்ய வேண்டும் என்றும், மேலும் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, கட்சியை விட்டு நீக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்த செயற்குழு தமிழ்மாநில காங்கிரஸ் தலைவரை கேட்டுக் கொள்கிறது. என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



டால்பின் மீன் சவாரிக்கு கடும் கிராக்கி இருக்கிறதாம். டால்பின்களை வைத்து சாகசம் செய்யும் காட்சியகங்களில் டால்பின் மீது சவாரி செய்து நீந்துவதற்கு இப்போது கடும் கிராக்கி ஏற்பட்டு இருக்கிறது. இதற்காக உல்லாச பயணிகள் பணத்தை தண்ணீராக செலவு செய்கிறார்கள். ஒருமுறை டால்பின் மீது சவாரி செய்ய ஏகப்பட்ட பணம் வசூலிக்கப் படுகிறதுசுற்றுலா முக்கிய அங்கம் பெறும் நாடுகளில் பழக்கப்பட்ட ஒரு டால்பின் மதிப்பு ரூ.30 லட்சம் ஆகும். அதேசமயம் டால்பின் காட்சியகங்களில் உள்ள நிலைமை மோசமாக இருக்கிறதாம். தண்ணீர் ஆழமாக இருப்பதில்லை. அழுக்காக உள்ளது. டால்பின்களுக்கு சரியான உணவோ, உரிய ஓய்வோ கொடுப்பது இல்லை. பசுபிக் கடலில் கடந்த ஜனவரி மாதம் பிடிக்கப்பட்ட லூனா என்ற டால்பினை கலிபோர்னியாவில் உள்ள டால்பின் காட்சியகத்துக்கு கொண்டு வந்து, பயிற்சி கொடுத்தனர். உல்லாச பயணிகள் அதன் மீது ஏறி மகிழ்ச்சியாக சவாரி செய்தனர். ஆனால் 5 வாரத்தில் அந்த டால்பின் இறந்து விட்டது. பிரேத பரிசோதனை செய்து பார்த்ததில் அதன் வயிற்றில் புற்றுநோய் தாக்கி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இது பெரும் பரபரப்பை உண்டாக்கியது. டால்பின்களை முறையாக பராமரிக்க வேண்டியதன் அவ்சியம் பற்றி பெரும் சர்ச்சை கிளம்பி இருக்கிறது.

# மாந்தீவு தொழுநோயாளர் இடமாற்றம் இரு வாரங்களுக்கு ஒத்திவைப்பு

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு - மாந்தீவுப் பகுதியிலுள்ள தொழுநோயாளர் வைத்தியமனை மூடப்படுவது தொடர்பான விவகாரத்தினை இரு வாரங்களுக்கு பிற்போடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட சிவில் விவகார இராணுவ இணைப்பதிகாரி லெப்டினன்ட் கேர்னல் எஸ்.எல்.குணசேகர தெரிவித்தார்.

கடந்த சுமார் 75 ஆண்டுகாலமாக இயங்கி வரும் இவ்வைத்தியசாலை வளாகத்தில் அண்மையில் எறிகணைகள் வீழ்ந்த சம்பவங்களையடுத்து ஏற்பட்ட அசாதாரண சூழலினால் இவ் வைத்தியசாலையினை மூடிவிடத் தீர்மானிக்கப்பட்டது என்றும் இங்குள்ள நோயாளர் எதிர்வரும் 28ம் திகதி ஹெந்தல தொழுநோயாளர் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந் நடவடிக்கைக்கு மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளதனால் வைத்திய சாலையை மூடிவிடும் தீர்மானம் மீளாய்வு செய்யப்படுவதாக சுகாதார அமைச்சு அதிகாரிக ளினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை மாந்தீவு தொழுநோயாளர் வைத்திய சாலையில் மிக நீண்ட காலமாகக் கடமையாற்றி வரும் தாதியர், எழுதுனர் போன்ற பல்வேறு துறை ஊழியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படாதிருப்பது குறித்து விசனம் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாக இதே வைத்தியசாலையில் சில ஊழியர்கள் தொடர்ச்சியாகக் கடமையாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்பகாலத்தில் சுமார் 400 தொழுநோயாளர்கள் இங்கு வைத்திய சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர். தற்போது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த 14 நோயா ளர்கள் உட்பட மொத்தம் 27 பேர் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## ஞாயிறு இந்து ஆலயங்களின் ஒன்று கூடல்

(அரியம்)

இந்து ஆலயங்களின் தலைமை ஒன்றியத்தின் 16வது ஒன்று கூடல் எதிர்வரும் 25ம் திகதி ஞாயிறு காலை 10 மணிக்கு மட்டக்களப்பு கொத்துக்குளம் ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய முன்றலில் இடம் பெறும்.

இவ்வொன்று கூடலில் சகல ஆலயங்களின் தலை வர்களும், பிரதேச ஒன்றியத் தலைவர், செயலாளர் ஆகியோர் இவ்வொன்று கூடலில் கலந்து கொள்ளும்படி வேண்டப்ப டுகின்றனர்.

இக் கூட்டத்தில் ஆலயங் களில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் பற்றியும் வருடாந்த பொதுக்கூட் டம் நடாத்துவதற்கான திகதியும் ஆராயப்படவுள்ளது.

இதே வேளை 25ம் திகதி ஞாயிறு காலை 9.30 மணிக்கு கல்லடி முகத்துவாரம் வீதியில் அமைந்துள்ள அரசடி விநாயகப் பெருமானுக்கு எண்ணெய் காப்பு சாத்தும் வைபவம் இடம் பெறும் ஸ்ரீமத் சுவாமி தந்திர தேவா மஹாராஜ் வைபவரீதியாக எண்ணெய்காப்பு சாத்தும் நிகழ்வை ஆரம்பித்து வைப்பார்.

# கல்முனை சிறைச்சாலை இடம்மாறமாட்டாது

(காரைதீவு நிருபர்)

கல்முனை சிறைச்சாலை மட்டக்களப்புக்கு இடம் மாற மாட்டாது எனத்தெரியவருகிறது. இதற்கான அனுமதியை சிறைச் சாலை அத்தியட்சர் அ.ஸ்கந்த ராஜா பெற்றுள்ளார். மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை சிறைச் சாலைகளுக்குப் பொறுப்பான சிறைச்சாலை அத்தியட்சர் அ.ஸ்கந்தராஜா கடந்த வாரம் கொழும்பு சென்றிருந்த போது இவ் உறுதி மொழியை உயரதிகா ரிகளிடமிருந்து பெற்றுள்ளார்.

எனவே கல்முனை சிறைச்சாலை தற்காலிகமாக நீதிமன்ற கட்டிடத்தில் இன்னும் இரு மாதங்களுக்கு இயங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே கல் முனையில் சிறைச்சாலைக்கூ டத்தை அமைக்க சட்டத்தரணி நதீர் தலைமையிலான குழுவினர் நடவடிக்கை எடுத்து வருவதாக அறிய வருகிறது.

கல்முனை பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.பளீல் இதற்கென 40 பேர்ச்சஸ் காணி யினை வழங்கியுள்ளார். கட்டிட நிருமாணத்திற்கு நிதி கோரப்பட் டுள்ளது.



இலங்கை மனித உரிமைகள் இல்லம். மனித உரிமைகள் பொது கற்கை நெறி ஒன்றினை திருகோணமலையில் நேற்று முன்தினம் (18-03-2001) ஆரம்பித்தது. 6 மாத காலம் மாதத்திற்கு 2 நாட்கள் நடைபெறும் இப்பயிற்சி நெறியினை ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதியும், வடக்கு கிழக்கு மாகாண சட்ட ஆலோசகருமான பொ.பாலவடிவேல் ஆரம்பித்து வைத்து உரையாற்றுவதையும், அருகில் திருகோணமலை வழக்கறிஞர் சங்கத் தலைவர் ஆ.ஜெகசோதி, சட்டத்தரணி மு.கோ.செல்வராசா, பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சி.கே.செல்லத்துரை, மாகாண பிரதி பிரதம செயலாளர் (நிதி) க.சிவபாலன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்:- திருமலை நிருபர்:- எஸ்.எஸ்.குமார்)


தினக்கதிர் ஓராண்டு நிறைவையொட்டி

தினக்கதிர் ஆதரவுடன்

**எருவில் இளைஞர் கழகமும்**

**கண்ணகி விளையாட்டுக் கழகமும்**

இணைந்து நடாத்தும்

**கலை, கலாசார போட்டியும் நிகழ்வுகளும்.**

**போட்டிகள்.**

I. **பாடல்**
1. கிராமியப் பாடல்கள்
2. நம்நாட்டுப் பாடல்கள்
3. கர்னாடக சங்கீதப் பாடல்கள்
4. தென்னிந்திய சினிமாப் பாடல்கள்

II. **ஆடல்**
1. கூத்து மற்றும் கிராமிய ஆடல்கள்
2. பரதம்
3. மேலைத்தேய ஆடல்

III. **நடிப்பு**

IV. **அறிவிப்பாளர்**

**போட்டி நிபந்தனைகள்**

- வயதெல்லை கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- அனைத்தும் தனிநபர் நிகழ்ச்சிகளே
- ஒருவர் ஒன்றிற்கு மேற்பட்ட போட்டிகளிலும் கலந்து கொள்ளலாம். (விண்ணப்பங்கள் தனித்தனியே அனுப்பப்பட வேண்டும்)
- போட்டிக்கான நுழைவுக்கட்டணம் 100/=(காசுக்கட்டளை மூலம் அனுப்பலாம்)
- விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி : 30.03.2001
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

விண்ணப்பங்கள் மற்றும் 100/=க்கான காசுக்கட்டளை அனுப்ப வேண்டிய முகவரி:

**செயலாளர்,
இளைஞர் கழகம்,
பாடசாலை வீதி,
எருவில் - களுவாஞ்சிகுடி**

வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**விண்ணப்பப்படிவம்**

------------ இங்கே வெட்டவும் ✂

1. முழுப்பெயர :.....................................................
2. முகவரி :.....................................................
..........................................................
3. அடையாள அட்டை இல: .....................................................
4. கலந்து கொள்ளும போட்டி: .....................................................
(விபரமாகக் குறிப்பிடவும்)

போட்டி நிபந்தனைகளை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வதுடன் போட்டி சிறப்பாக நடைபெற பூரண ஒத்துழைப்பு வழங்குவேன்.

திகதி:.....................

கையொப்பம்

இணை விளம்பர அனுசரணை:-

* சக்தி FM&TV

* IBS - களுவாஞ்சிகுடி


# பெண் விடுதலையில் ........................

(மேம் பக்க தொடர்ச்சி)

கொள்வதில்லை. இது இவர்களின் மிக முக்கியமான தத்துவார்த்த குறைபாடாகவே தெரிகின்றது. இந்தக் குறைபாட்டை தீர்த்து விட்டு பெண்ணியம் பேசுவது பயனுள்ளதாக அமையும் என எதிர்பார்க்கலாம்.

இரண்டாவது கேள்விக்கு வருவோமெனில் இது முதலாவது கேள்வியுடன் சம்மந்தப்பட்ட ஒன்று தான். இருந்த போதும் இது சம்மந்தமாக ஒரு தீர்க்கமான முடிவு பெண்ணியலாளர்களிடம் கிடையாது போல் உள்ளது. இதனால் ஆண்களை தமது தேவைக்குப் பயன்படுத்தும் ஒரு கருவியாக ஆக்கிவிட முயல கின்றனர். அதன் ஒரு சிறு உதாரணம் சுலோக அட்டை களை நாங்கள் ஏந்திச் செல்ல வேண்டும் என்பது அந்தச் சுலோக அட்டைகளில் எழுதப்பட்டிருக்கும். சுலோகங்களுக்கு ஏற்ற பிரதிநி திகளாக நாங்கள் இருக்கிறோமா என்பதல்ல முக்கியம் இயந்திரத் தனமாக அவற்றை தூக்கிக் கொண்டு ஊர்வலத்தில் போனால் போதும் என்பது தான் முக்கியம். இதுவும் ஒரு வெளிவேஷமாகவே தெரிகிறது. இந்த வெளிவேஷம் காட்ட விரும்பாததினாலேயே நாம் சுலோக அட்டைகளைக் கொண்டு செல்ல மறுத்ததுடன் இது உங்களுடைய பிரச்சினை என்று கூறினோம். உண்மையில் தங்கள் விடுதலையில் கருத்தியல் ரீதியாக தெளிவு இல்லாது ஆண்களை பயன்படுத்த வேண்டும் என இருப்பவர்களுக்கு இது விளங்கியிருக்க நியாயம் இல்லை தான்.

எனவே பெண்ணிய செயற்பாட்டாளர் என தம்மை பறைசாற்றிக் கொள்ள முதல் பெண்ணியக்கோட்பாடுகளின் உண்மையான பிரதிநிதிகளாக இருக்க முயல வேண்டும். அல்லது தமக்குப் பொருந்தாத பெண்ணியக் கோட்பாடுகளை ஈவிரக்கமின்றி விமர்சித்து விட்டு தமக்குப் பொருத்தமான ஒரு கொள்கையில் இருந்து இயங்க வேண்டும். உண்மையாக விடுத லையை நேசிப்பவர்கள் இதைத் தான் செய்வார்கள். அப்படியின்றி விலாங்குபோல் இருப்பவர்கள் விடுதலையின் உண்மையான பிரதிநிதிகள் அல்ல என்பதே எனது கருத்தாகும்.

# மட்டிக்கழி ஸ்ரீ திரௌபதாதேவி ஆலய வருடாந்த உற்சவம்

(செ.கு)

மட்டக்களப்பு - மட்டிக் கழி ஸ்ரீ திரௌபதாதேவி ஆலய பங்குனி உத்திர வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 30ம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 07-04-2001 ஆம் திகதி சனிக்கிழமை காலை பாற்பொங்கல் வைபவத்துடன் இனிதே நிறைவு பெறும்.

சடங்கு நடைபெறும் நாட்களில் பகல் பூசை பி.ப 1.00 மணிக்கும். இரவுப் பூசை 9.00 மணிக்கும் ஆரம்பமாகும். கிரியைகளை பிரதமபூசகர் செ.நல்லையாவும், உதவிப் பூசகர் ந.தர்மதாஸும் நடாத்து வார்கள்.

06-04-2001 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீ மிதிப்பு வைபவத்தின் பின் மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் பாத யாத்தி ரிகர் சங்கத்தினரால் பக்த அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும் என, ஆலயப ரிபாலன சபையினர் தெரிவிக் கின்றனர்.


2 வது ஆண்டு நினைவஞ்சலி

✝

15 ※ 04 ※ 1913



23 ※ 03 ※ 1999

அமரர் திருமதி
அன்னம்மா தாமோதரம்பிள்ளை

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம்; கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்! (அரு:11:25)

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள், உற்றார். உறவி னர்கள்

ஜி.போல் சந்திரசேகர்
விஜயபுரம்

# பெண் விடுதலையில் ஆண்களின் பங்கு என்ன?

16-03-2001 அன்று மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி சபைகளும், உள்ளூராட்சி திணைக்களமும் இணைந்து நடாத்திய சர்வதேச மகளிர் தின விழாவில் கருத்துரையாற்றிய வாசுகி ஜெயசங்கர் அவர்கள் ''பெண் விடுதலைக்கு ஆதரவான கருத்துக்களை தெரிவிக்கும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளை நாங்கள் ஏந்த மாட்டோம். இது உங்களுடைய பிரச்சினை நீங்கள் தான் ஏந்திப்பிடிக்க வேண்டும் என சம்பாஷித்ததை நான் அவதானித்தேன். இந்தப் பிரச்சினையை ஏன் பிரித்துப் பார்க்கிறீர்கள் என வினாவினார்'' இது 17-03-2001 அன்றைய தினக்கதிர் செய்தியிலும் வெளிவந்திருந்தது.

இவ்விடயத்தில் நேரடியாக சம்மந்தப்பட்டவன் என்பதினாலும் இந்த உரை என்னுள் சில கேள்விகளை எழுப்புவதினாலும் இதை எழுதுகின்றேன்.

16-03-2001 அன்று காந்தி சிலையருகில் இருந்து ஊர்வலம் ஆரம்பமான போது சுலோக அட்டைகள் ஓரிடத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஊர்வலத்தில் கலந்து கொண்ட அநேக பெண்கள் அச்சுலோக அட்டைகளைக் காணவில்லையோ அல்லது எடுத்துச் செல்ல விரும்பவில்லையோ தெரியாது. அதனால் நான் அச்சுலோக அட்டைகளை எடுத்து எனக்குத் தெரிந்த சில பெண் நண்பர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தேன். அப்போது சூரியாவைச் சேர்ந்த ஒரு பெண் ஒரு சுலோக அட்டையை எடுத்து என்னைக் கொண்டு செல்லும்படி கட்டாயப்படுத்தினார். அப்போது நானும் எனது சில நண்பர்களும் ''இது உங்களுடைய பிரச்சினை நீங்கள் தான் பிடிக்க வேண்டும்'' என்றோம். அப்போது நாம் அதை ஒரு பிரச்சினையாகப் பார்க்கவில்லை. பின்பு வாசுகி ஜெயசங்கர் அவர்கள் தமது கருத்துரையின் முத்தாய்ப்பாய் இவ்விடயத்தை எடுத்துக் கொண்ட போது தான் இது ஒரு பிரச்சினையான விடயம் என்பதை விளங்கிக் கொண்டேன். அதாவது இதற்குள் இரண்டு பிரச்சினைகள் அல்லது கேள்விகள் என்னுள் எழுந்தது.

1. பெண்விடுதலை சம்மந்தமான பிரச்சினைகளை யார் பிரித்துப் பார்க்கிறார்கள்?

2. பெண் விடுதலையில் ஆண்களின் பங்கு என்ன? என்பவை அவையாகும்.

முதலாவது கேள்விக்கு வருவோமெனில் பெண் விடுதலை சம்மந்தமாக கருத்தியல் ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் பெண்களே ஈடுபட வேண்டும் என்பது பெண்ணியர்களுடைய

**சு.சீவரெத்தினம்**

ஒரு பொதுவான கொள்கையாக இருந்து வருகிறது. இதன் காரணமாக பெண்விடுதலை சம்மந்தமாக கருத்தியல் ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் ஆதரவாகச் செயற்படுகின்ற ஆண்களைக் கூட தங்களது பெண்ணிய நடவடிக்கைகளில் சேர்த்துக் கொள்வது கிடையாது. வாசுகியோ அல்லது வாசுகி சார்ந்திருக்கும் சூரியாவோ இதற்கு விதிவிலக்கன்று. இப்படியிருக்கும் போது வூசுகி ஆண்கள் இந்தப் பிரச்சினையை வேறுபடுத்திப் பார்ப்பதாகப் பேசுவது எங்ஙனம்? வாசுகியின் இந்தப் பேச்சு ஒரு உண்மையை புலப்படுத்துகின்றது.

அதாவது தாம் ஒரு தீவிரப் பெண்ணியர் என்பதை காட்டிக் கொள்வதற்காக நடைமுறைக்குப் பொருந்தாத சில கொள்கைகளை வலுக்கட்டாயமாக கடைப்பிடிப்பது போல்த் தெரிகிறது. இதன் காரண மாகத்தான் அவரை அறியாமலே அவரின் பெண்ணியக் கொள்கையை மறந்து ஆண்கள் பிரித்துப் பார்ப்பதாகப் பேசியிருக்கின்றார். முதலில் வாசுகி இவ்வாறான வெளிவேஷங்களைக் கலைத்து விட்டு தங்களது விடுதலையின் உண்மையான நண்பன் யார்? விரோதியார்? என்பதை இனம் கண்டு கொள்ள முயலவேண்டும். இவர்கள் வலுக்கட்டாயமாக கடைப்பிடித்து வரும் ஆண்களை தமது செயற்பாடுகளில் இணைத்துக் கொள்ளக் கூடாது என்பதின் வறட்டுவாத வளர்ச்சியே ஆண்கள் எல்லாம் பெண்களுக்கு எதிரானவர். பெண்கள் எல்லாம் பெண்களுக்கு சார்பானவர் என்ற ஒரு போக்கை ஏற்படுத்துகின்றது. உண்மையில் இவர்கள் இங்கு ஆண், பெண் என்ற உயிரியல் வேறுபாட்டைத்தான் முக்கியமானதாக கருதுகிறார்களே தவிர ஒரு பெண் ஆண்நிலைவாத கருத்தியலால் வளர்க்கப்பட்டு அதன் ஆளுமைமிக்க பிரதிநிதியாக இருப்பதையோ அல்லது ஒரு ஆண் பெண்ணிலைவாத கருத்தியலால் உள்வாங்கப்பட்டு அதன் ஆளுமைமிக்க பிரதிநிதியாக இருப்பதையோ கண்டு

(5ம் பக்கம் பார்க்க)

## கருத்தரங்கு
### இது உங்கள் பக்கம்

இப்பகுதி வாசகர்களாகிய உங்களுக்கெனவே ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் சமூக, அரசியல், பொருளாதார, விஞ்ஞானம் மற்றும் கலை, இலக்கியம் சார்ந்த உங்களது 'கருத்துக்களையும் விமர்சனங்களையுழ் நீங்கள் எழுதலாம். இனி இது உங்கள் பக்கம்.

**ஆசிரியர்**

******************************

# நட்சத்திரப் பலாபலன் 03
# -கார்த்திகை-

வார்த்தைகளுடையனாகும் வழக்கறிந்துரைக்க வல்லன் கூர்த்தக மனத்தனாகுங் குணமுடைக்கிளையநாகும் போர்த்தது குறியனாகும் புகழ் பெறப் பொருளுந்தேடுங் கார்த்திகை நாளிற்றோன்றும் கருத்துளகாளை தானே.

(மரணகண்டி என்னும் நூல்)

மேஷ ராசியில் 26-40 பாகைக்கு மேல் 30 பாகை வரையும், ரிஷப ராசியில் 10 பாகை வரையும் வியாபித்திருப்பது கார்த்திகை நட்ஷத்திரமாகும்.

முதற்பாதம் மேஷ ராசியிலும். பிற மூன்று பாதங்களும் ரிஷப ராசியிலும் அமைவது.

முருகப்பெருமான் உதித்த நட்ஷத்திரம் இது. முருகக்கடவுள் அடியவர்கள் இந்த நாளைப் பக்தியுடன் விரதமிருந்து முருகக்கடவுளை வழிபடுவதில் ஈடுபடுத்தி மகிழ்வார்கள்.

கார்த்திகையின் அதிபதி சூரியன் மேஷாதிபன் செவ்வாய், ரிஷபாதிபன் சுக்கிரன். எனவே முதற் பாதத்தில் பிறந்தவர்களிடம் செவ்வாய், சூரியன், சந்திரன் தன்மைகளும், மற்றவர்களிடம் சுக்கிரன், சூரியன், சந்திரன் தன்மைகளும் மிகுதியாக வெளிப்படும்.

கார்த்திகை நட்சத்திர குணங்கள் அனைவரிடமும் இருந்தாலும் பாதங்களுக்குத் தக்கபடி அமைந்திருக்கும் வேறுபாடுகளையும் காண முடியும்.

### பொது குணங்கள்

கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்தவர்களான அனைவரும் சிறந்த சாப்பாட்டுப் பிரியர்களாக விளங்கக் காணலாம். 'நல்ல சுவையான உணவு' என்றால் இவர்களுக்கு மிகவும் ஆனந்தம். நேரம் பாராமல் எதாவது உண்டபடி மகிழ்வதும் இவர்களின் பிறவிச் சுபாவமாகக் காணப்படும்.

இப்படியே இவர்களிடம் ஆசை மயக்கத்திலும் கட்டுப்பாடுகளை மீறிச் செல்லும் போக்கு பரவலாகக் காணப்படும்.

எடுப்பான உடல்வாகு பெற்றவர்கள். கம்பீரமான, கவற்சியான தோற்றப் பொலிவுடன், வலிமையும் கொண்டிருப்பார்கள். இதனால் எந்த இடத்திலும் இவர்களைத் தனியாக அடையாளம் கண்டு விடலாம்.

ஏதாவது ஒரு வகையில் புகழைப் பெற்றுவிடுகிறவர்களாகவும் இவர்களைச் சொல்லலாம்.

ஆட்சியிலுள்ள பெருநிலையினர் பலருடனும் நெருங்கிப் பழகித் தங்களுக்கு அவர்களை நண்பர்களாக ஆக்கிக் கொள்வார்கள். இதனால் செல்வ செல்வாக்கும் இவர்களுக்கு மிகுதியாகக் கிடைத்து வரும்.

தங்கள் எண்ணத்தை எப்படிச் சாதித்துக் கொள்வது என்பதைப் பற்றியே மிகுதியாகச் சிந்திப்பவர்கள் இவர்கள். இதற்காக என்னென்ன சூழ்ச்சிகளை மேற்கொள்ளலாம் என்று எண்ணித் திட்டமிட்டும் நிறைவேற்றுபவர்கள்.

பொய்களைப் பிறர் உண்மைகள் என்று நம்பும் வகையிலே புனைந்து சொல்லி, அவர்களை வசப்படுத்துவதிலும் திறமையானவர்கள். பொய்யின் வழியாகவே மிகுதியான பொருள் தேடிக் குவிப்பதிலும் திறமையானவர்கள்.

பெண்மைப் பண்பு கொண்டவர்கள். ஆட்டைப் போல் பயந்த சாதுவான போக்கும், நெருக்கடி நேரத்தில் கண்மூடித்தனமாக மோதுகின்ற தன்மையும் பெற்றவர்கள். மயிலைப் போல அழகாக விளங்க வேண்டும் என்று பல விதங்களிலும் தங்களை அழகாக அலங்கரித்துக் கொள்பவர்கள். அத்திமரம் இவர்களுக்கு ராசியானது. தோட்டங்களில் வைத்து வளர்த்தால் நன்மை உண்டாகும்.

முரட்டுத் துணிச்சல் கொண்டவர்கள். நிதானமாகச் சிந்தித்து அமைதியாகச் செயல்படுத்துவதும் குறைவுதான். மற்றவர்களின் உதவியையும், ஒத்துழைபபையும் பெற்று வாழ்வில் உயர நினைப்பவர்கள். சுய சக்தியிலே முதல் பாதத்தில் பிறந்த வர்களுக்குள்ள நம்பிக்கையைப் பிறரிடம் காண்பது கடினமே.

சுற்றத்தாரிடமும் நண்பர்களிடமும் பாசத்தோடு நடந்து கொள்வார்கள். சிலருக்குக் கழுத்தின் பின்புறத்தில் மச்சம் காணப்படுவதுண்டு.

மறைவாகப் பாவச் செயல்களைச் செய்வதில் சிலருக்கு எப்போதும் ஆர்வத் துடிப்பு இருக்கும். இத்தகைய செயல்களில் ஈடுபட்டு இவர்கள் மகிழ்ச்சியும் காண்பார்கள்.

சிலருக்கு மதுப்பழக்கம் போன்றவையும் தொற்றிக் கொள்ளும். கலையார்வமும் ஈடுபடும் சிலரிடம் காணலாம்.

### நான்கு பாதங்கள

**முதற்பாதம்:~** முதல் பாதத்தில் பிறந்தவர்களின் நவாம்ச நாதன் தனுசு குருபகவான் ஆவார்; ராசி நாதன் செவ்வாய். எனவே குருமங்கள் யோகம் அமைந்து இவர்கள் ஏராளமாக பணம் சம்பாதித்து விடுவார்கள். மிகவும் சாமர்த்தியசாலிகள். ஆதலால் எதிலும் வெற்றி பெற்று நன்மைகளைப் பெறுபவர்களாகவும் விளங்குவார்கள். செல்வ செல்வாக்குகளில் உயர்ந்தவர்கள் எனலாம். அரசியல் செல்வாக்கும் இவர்கட்கு மிகுதியாக ஏற்படும்.

**இரண்டாம் பாதம்:~** இந்தப்பாதத் துக்குரிய நவாம்ச அதிபதி மகரச் சனியாகும். இவருக்குப் பாவகாரி யங்களில் மனம் செல்லும். நடத்தை தவறிய பெண்களின் உறவிலும் மகிழ்வதற்கு முயல்வார். சொல்லப்போனால் இவருடைய பற்றும் பாசமும் நெருக்கமும் வெளியிடங்களிலேயே மிகுதியாகக் காணப்படும்.

**மூன்றாம் பாதம்~** இந்தப் பாதத்துக்கு உரியவர்கும் பச்சனி யாவார். இவரை உக்கிரமான குணம் பெற்றவர் என்பார்கள். இவர்களுடைய புத்தியும் பழக்கவழக்கங்களும் உயர்வாக இருப்பதில்லை. ஒழுக்கம் பற்றியும் இவர்கள் கவலைப்படுவதில்லை. இவர்களுக்கு நெருக்கமானவர்களும் நல்லவர்களாக பெரும்பாலும் அமைவதில்லை. இந்த வாழ்விலேயே இவர் திருப்தியடைந்து மகிழ்ச்சி காண்பார்கள்.

**நான்காம் பாதம்:~** இது மீன குருவின் செல்வாக்கைப் பெற்றிருப்பது. கல்வி கேள்விகளில் உயர்ந்து விளங்கும் குருவைப் போன்ற தன்மை இவர்களிடம் அமைந்து விடும். அடக்கமான குணமும் நயமான பேச்சும் உடையவர்கள். தர்மசிந்தையோடு எவருக்கும் உதவுகின்ற மனக்கசிவும் காணப்படும்.

பொதுவாகக் கார்த்திகையிற் பிறந்தவர்களில் முதற் பாதத்தில் பிறந்தவர்களும், நான்காம் பாதத்தில் பிறந்தவர்களும் உயர்வான வாழ்க்கையிலேயே பிரகாசிப்பார்கள். இரண்டு மூன்றாம் பாதத்தில் பிறந்தவர்கள் தங்கள் மனப் போக்கை மாற்றிக் கொண்டு தீவிரமான உழைப்பிலே நம்பிக்கையோடு ஈடுபட்டால் தான் நல்ல வாழ்க்கையைக் காண முடியும்.

### பொது

கார்த்திகை குலநட்சத்திரம் என்பதால் இவர்கள் தாங்களே உழைத்துத் தேடித்தான் தங்களுடைய வாழ்க்கை வசதிகளை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

இந்த நட்சத்திரத்தில் நோய் நொடிகள் ஏற்பட்டால் எளிதிலே தீர்வதில்லை. இவர்கள் தங்கள் பிறந்த நட்சத்திர நாட்களில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

கார்த்திகை நட்சத்திரத்தில் 'பூப்பு' எய்தும் பெண்களின் வாழ்க்கை சுபமாகவே அமைந்து விடும்.(முதல் பாதம் என்றால்)

2ம் 3ம் 4ம் பாதத்தில் பூப்பு எய்தும் பெண்களுக்கு சில தடை ஏற்படும். சாந்தி செய்வதன் மூலம் இந்த தீமைகளைக் குறைக்கலாம்.

### பெண்கள் பற்றிய செய்திகள்

இந்த நட்சத்திரத்தில் பிறந்த பெண்கள் மனதிலே மிகவும் உறுதி படைத்தவர்களாக விளங்குவார்கள். பிறர் என்ன நினைப்பார்கள் என்பதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படமாட்டார்கள். பிறரைப்பற்றிப் பெரும்பாலும் சிந்திக்கவே மாட்டார்கள். இரக்கம் குறைந்தவர்கள். எதையும் பிறருக்காகச் செய்யவும் நினைக்க மாட்டார்கள்.

குடும்ப வாழ்விலே கணவனை மகிழ்வித்துக் குடும்பக் காரியங்களையும் சிறப்பாகச் செய்தபடி மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்துவதில் இவர்கள் வல்லவர்களாக விளங்குவார்கள்.

### பெயர் அமைப்புப் பற்றி

இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள், அ.இ.ஊ.எ. என்னும் எழுத்துக்கள் முதலில் அமைகின்ற பெயர்களை வைத்துக் கொண்டால் நன்மை அடைவார்கள்.

இ.ஊ.எழுத்துக்குரிய இரண்டு மூன்றாம் பாதங்களில் பிறந்தவர்களும், முதல் அல்லது நான்காம் பாதங்களுக்கு உரிய அ.எ என்னும் எழுத்துக்களோடு தொடங்கும் 'பெயர்களை வைத்துக் கொண்டால் ஓரளவு சிறப்பான வாழ்க்கையைப் பெற்று மகிழலாம்.

தமிழில் இந்த எழுத்துக்களில் தொடங்கும் பெயர்கள் ஏராளமாகவே இருக்கின்றன.

**வே. தவராசா**
**ஜோதிடர்**
**குருக்கள்மடம்**




# உதைபந்தாட்ட இறுதிப்போட்டிக்கு தெரிவு

(நமது நிருபர்)

27வது தேசிய விளையாட்டு விழாவான மண்முனை வடக்கு பிரதேச விளையாட்டு விழாவின் 2001ம் ஆண்டுக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டிக்கு மட்டுநகர் பாடும்மீன் பொழுது போக்குக் கழகமும் முகத்துவாரம் லைற்ஹவுஸ் விளையாட்டுக் கழகமும் தெரிவு செய்யப்பட்டு இருக்கின்றன. இப்போட்டி நிகழ்ச்சியானது, மெய்வல்லுனர் போட்டியோடு இறுதி நாள் அன்று சிறப்பாக மட்/வெபர் மைதானத்தில் நடைபெற இருக்கின்றது.

நடைபெற்ற போட்டிகளில் முகத்துவாரம் லைற்ஹவுஸ் அணியினர் முதல் போட்டியில் சிவனொளி.வி. கழகத்தையும், கால் இறுதிப் போட்டியில் மட்/அன்ரனிஸ் கழகத்தையும், அரை இறுதிப் போட்டியில் பலம் வாய்ந்த டச்பார் சென் இக்னேசியஸ் வி.கழகத்தையும் வெற்றி கொண்டு, இறுதிப் போட்டியில் மட்டுநகர் பாடுமீன் வி.கழகத்துடன் மோத இருக்கின்றது.

நடைபெற்ற போட்டிகளில் மட்டுநகர் பாடும் மீன் பொழுது போக்கு கழகம் டச்பார் சண்பிளவர் வி.கழகத்தையும், கால் இறுதிப் போட்டியில் கல்லடி சிவானந்தா வி.கழகத்தையும், இறுதிப்போட்டியில் கூளாவடி டிஸ்கோ வி.கழகத்தை வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்கு முகத்துவாரம் லைற்ஹவுஸ் வி.கழகத்துடன் மோதுவதற்கு தன்னைப் பலப்படுத்தி வருகின்றது. குறிப்பிடப்பட வேண்டியது. 26வது தேசிய விளையாட்டு விழா மண்முனை வடக்கு பிரதேசம் 2000ம் ஆண்டில் பாடும் மீன் பொழுது போக்கு கழகம் சாம்பியனாகியது, குறிப்பிட வேண்டிய முக்கிய அம்சமாகும்.

# மாஸ்டர் கப் – 2000 போட்டி

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கம் மட்டக்களப்பு வேல் முருகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளரின் அனுசரணையுடன் நடாத்தும் 40 வயதிற்கு மேற்பட்ட கழகங்களுக்கான (Master Cup - 2000) போட்டிகள் யாவும் 17-02-2001 தொடக்கம் லீக் முறையாக மட்/வெபர் மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. இதில் மட்டுநகர் பாடும்மீன் வி.கழகம், சுதந்திரன்.வி.கழகம், அன்ரனிஸ் வி.கழகம், பி.ஆர்.சி வி.கழகம், சிவானந்தா.வி.கழகம் என்பன மோதுகின்றன.

நடைபெற்ற போட்டிகளின் அடிப்படையில் மட்டுநகர் சென்/அன்ரனிஸ் வி.கழகம் அதிக புள்ளிகளைப் பெற்று முன்னணியில் இருப்பதை நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது.

இப்போட்டிகளில் முன்னைய அனுபவசாலிகளின் விளையாட்டு திறனை காணக்கூடியதாக இருக்கின்றது. இவர்கள் மிகவும் நேர்த்தியாக விளையாடுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இப்போட்டிகள் யாவற்றுக்கும் மட்/மாவட்ட உதைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் திறமையான முறையில் மத்தியஸ்தம் புரிகிறது.

# கால்பந்தாட்டச் சங்கம் நடாத்தும் திணைக்களச் சுற்றுப் போட்டி 2001


(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கம் நடாத்தும் திணைக்களச் சுற்றுப் போட்டிகள் யாவும் லீக் முறையில், மட்/வெபர் மைதானத்தில் நடைபெற இருக்கின்றது. இப்போட்டியின் முதல் போட்டியில் 22-03-2001 அன்று மாலை 4.30 மணிக்கு ஈஸ்ரன் பஸ் கம்பனி அணியினரை எதிர்த்து மட்/பொலிஸ் அணியினர் மோத இருக்கின்றனர். 23-03-2001 அன்று மட்/மாநகர சபை அணியினரை எதிர்த்து மட்/இராணுவ அணியினரும், 26-03-2001 ஈஸ்டன் பஸ் கம்பனி அணியினரை எதிர்த்து மட்/மாநகர சபை அணியினரும், 27-03-2001 மட்/இராணுவ அணியினரை எதிர்த்து மட்/மாநகர சபை அணியினரும் மோதவுள்ளனர்.

இத் திணைக்களத்துக்கு இடையில் நடைபெறுகின்ற போட்டிகளின் படி முறையே இரண்டு தடவை தொடர்ச்சியாக மட்/மாநகர சபை அணியினர் சாம்பியனாகியதுகுறிப்பிடத்தக்க அம்சமாகும்.




தொழில் கல்வி ,தொழில் பயிற்சி அமைச்சின் கீழ் இயங்கும் ஓட்டமாவடி தொழில் திணைக்களத்தின் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியின் போது வெற்றி பெற்றவர்களுக்கான வெற்றிக் கிண்ணத்தையும் பரிசுப்பொருளினையும் தலைவர்.எம்.ஜே.எம் அன்வர் பிரதியமைச்சர் முகைதீன் அப்துல் காதரிடம் இருந்து பெறுவதை படத்தில் காணலாம். (ஏறாவூர் [illegible])



மட்/செங்கலடி மத்திய கல்லூரியின் பார்வையாளர் அரங்கு (PAVILION) திறப்பு விழாவும், வருடாந்த இல்ல சிறுவர் விளையாட்டுப்போட்டியும் நடைபெற்ற போது முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா, கல்லூரி அதிபர் வ.கந்தசாமி, கோட்டக் கல்வி அதிகாரி.இ.வேலுப்பிள்ளை, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆ.குணராஜரெட்ணம், பிரதிக்கல்விப்பணிப்பாளர் யூ.எல்.எம்.ஜெயினுதீன், உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எச்.எம்.முகைதீன், உதவிக்கல்விப்பணிப்பாளர் ஜீ.தம்பிப்பிள்ளை சகிதம் அழைத்து வரப்படுவதையும். விநோத உடைப்போட்டியில் பங்கு பற்றிய மாணவர்களையும், முதன்மை விருந்தினர் உரையாற்றுவதையும், வெற்றி பெற்ற மாணவர் ஒருவருக்கு பிரதிக் கல்விப்பணிப்பாளர் பரிசினை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## வாசகர் நெஞ்சம்

# மண் அகழ்வை தடுப்பார் இல்லையா?

நாவற்குடா கடற்கரை வீதியில் உள்ள அரச குடி நிலைக் காணிகளைத் தம் வசமாக்கி அவற்றில் இருந்து மண் வியாபாரம் செய்யும் சமூக விரோதிகளை தடுக்க முடியாமல் நாவற்குடா மக்கள் பெரும் விசனப் படுகின்றார்கள். பல சந்தர்ப்பங்களில் கையும் களவுமாக உழவு இயந்திரங்களில் பிடிபட்ட மண் திருடர்கள் சட்டத்தின் பிடியில் இருந்து சுலபமாக தப்பி விடுகின்றனர். சமூக விரோத் செயல்கள் புரிபவர்கள் சட்டத்துக்குள் அகப்படாமல் தப்பிக் கொள்வது மக்கள் மனதில் பெரும் கிலேசத்தை தோற்றுவித்திருக்கின்றது. சமூக விரோதிகளை சட்டம் அனுசரிக்கும் போது அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பதே குடிவாழ் பொது மக்களின் மிகப் பெரும் கேள்வியாக அமைந்துள்ளது. பொது மக்களின் கண்களில் மண்ணைத் தூவி தற்போது இரவு நேரமண் அகழ்வை உழவு இயந்திர முதலாளிமார் செய்கின்றனர். மூன்று அல்லது ஐந்துக்கு மேற்பட்ட உழவு இயந்திரங்கள் மேட்டுக் குடி நிலமண்ணை அகழ்ந்து பாரிய கிடங்குகளைத் தோற்றுவித்திருப்பதை காணும் குடி நிலமற்ற ஏழைகள் ஏக்கப்பெருமூச்சை விடுகின்றனர். தட்டிக் கேட்க யாருமற்ற நிலையில் தாழ் நிலப் பிரதேசமான நாவற்குடா கிழக்கு பகுதி மண் காத்தான்குடிப் பகுதிக்கு பெருவாரியாக எடுத்துச் செல்லப்படுகின்றது. வேலியே பயிரை மேயும் கதை போல் பாதுகாப்பு பிரதேசம் பாதுகாப்பின்றி சமூக விரோதிகளின் ஆளுகைக்குள் அகப்பட்டுச் சீரழிகின்றது.

மண் அகழ்வைத் தடுத்து நிறுத்துவது யார்? சமூக விரோதிகளுக்கு சட்டத்தின் மூலம் தண்டனை வழங்குவது யார்? என்பதில் நாவற்குடா வாழ் பொது மக்கள் மட்டுமன்றி அயல் கிராம வாசிகளும் அங்கலாய்க்கின்றனர்.

**நாவலூர் சில் செல்வம்**

## ''கல்வியே மடமையைச் சுட்டெரிக்கும் தீ....''

# திருக்குறளா?

புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கமைய வெளி வந்துள்ள 6ந் தர ஆங்கில பாடநூலில் - THE WORLD THROUGH ENGLISH பாடசாலை மகுட வாக்கியத்தை எழுதும் பயிற்சி ஒன்று இடம் பெறுகிறது. மட்/கிரான்குளம் விநாயகர் மகாவித்தியாலயப் பாடசாலை இலச்சினையில் ''கல்வியே மடமையைச் சுட்டெரிக்கும் தீ'' என்ற மகுட வாக்கியம் வழக்கில் உள்ளது.

மேற்படி மகுட வாக்கியம் ஆங்கில மொழியில் இல்லாமையால் சம்பந்தப்பட்ட பாட ஆசிரியர், குறித்த தமிழ் வாக்கியத்தை மாணவர்களுக்குக் காண்பித்து அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பயிற்சியைப் பூரணப்படுத்த உதவியுள்ளார்.

மாணவர் ஒருவர் தன் பெற்றோர்களுடன் ஆங்கில பாடந்தொடர்பாக உரையாடிய போது மகுட வாக்கியத்தைக் கண்ணுற்ற பெற்றார் அது பிள்ளையின் தரத்திற்குப் பொருத்தமில்லாத வாக்கியம் என்றும். அது சம்பந்தப்பட்ட ஆங்கில ஆசிரியரின் தவறு எனக்கருதி அது பற்றித் தனக்கு அறிமுகமானவரும், கல்வித்துறையில் ஈடுபடுகிறவர் என்ற முறையிலும் ஆசிரிய ஆலோசகர் ஒருவரிடம் சம்பந்தப்பட்ட விடயத்தை நேரிற் பார்க்காமலோ என்னவோ குறித்த ஆசிரிய ஆலோச்கர் மேற்படி ''மடமையைச் சுட்டெரிக்கும் தீ'' என்பது திருக்குறள் என்றும் அத்னைக் கற்பிக்க வேண்டிய சந்தர்ப்பம் தரம் 6 இல் இல்லையென்றும் அது பற்றி மட்டக்களப்பு வலய ஆங்கிலக்கல்வி அதிகாரியிடம் முறையிட்டுள்ளாராம்.

முறைப்பாடு தொடர்பான அவதானத்தில் ஈடுபட்ட அதிகாரி சம்பந்தப்பட்ட ஆசிரியர் திருக்குறளைக் கற்பிக்க ஏற்பட்ட அவசியத்தை விசாரணைக்குட்படுத்தியுள்ளார்.

''கல்வியே மடமையைச் சுட்டெரிக்கும் தீ என்பது திருக்குறளா? மகுட வாக்கியம் ஆங்கிலத்தில் இல்லாவிட்டால் சம்பந்தப்பட்ட பயிற்சியைக் கற்பிக்கக் கூடாதா என ஆசிரியர் அங்கலாய்க்கின்றார்.

**ச.கணேசதாஸ்**
**ஆரையம்பதி**

# இப்படியும் நடக்கிறது

களுவாஞ்சிகுடி எருவில், குழந்தை நலன் பேணும் மையத்தில் பிள்ளைகளின் நலன் பேண அங்கு கடமையாற்றும் தாதியர் அங்கு வரும் தாய்மார்களோடு அநாகரீகமான முறையில் வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்துகிறார்கள்.

இதே வேளை தடுப்பூசி போடுவதற்கென 7ரூபா பணத்தையும் அறவிடுகிறார்கள். மேலும் ''திரிபோஷா'' வுக்கு 1 ரூபா வீதமும் அறவிடுகின்றனர்.

இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனித்து சரி செய்வார்களா?

**கே.இராமலிங்கம்**
**எருவில்**
**களுவாஞ்சிகுடி**

# மட்டக்களப்பு எல்லையில் செய்கை பண்ணாத காணிகளுக்கு நட்ட ஈடு பெற்றுகொடுக்க நவம் எம்.பி கோரிக்கை!

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 35ம் எல்லைக்கிராமத்தில் காணி உரிமையாளர்களால் கடந்த பத்து வருடமாக செய்கை பண்ணாமல் இருக்கும் நெல் வயல்களுக்கு நட்ட ஈடு பெற்றுக்கொடுக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா விவசாய காணியமைச்சர் ஜி.எம். ஜெயரத்தினாவிடம் கேட்டுள்ளார்.

பாராளுமன்ற கட்டடத்தில் நேற்று நடைபெற்ற கமத் தொழில் அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட போது இது தொடர்பாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செல்வராசா எம்.பி. காணியமைச்சரிடம் மேலும் தெரிவிக்கையில் கடந்த பத்து வருடகாலமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்புத் தொகுதியின் அம்பாறையை அண்டிய எல்லை வயற் பிரதேசத்திலுள்ள சுமார் 500 ஏக்கர் நெற்காணியை செய்கை பண்ணுவதற்கு படையினர் அனுமதி மறுத்துள்ளதால் அக்காணிகளை சிங்கள மக்கள் செய்கை பண்ணி வருகின்றனர்.

ஆனால் காணி உரிமையாளர்களான தமிழர்களுக்கு குத்தகையோ அல்லது வேறு உதவிகளோ வழங்கப்படவில்லை எனவே இதற்கு நட்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதற்கு அமைச்சர் பதிலளிக்கையில் இவ்விடயம் தொடர்பாக கமநல ஆணையாளரிடம் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தாம் கேட்டுள்ளதாகவும், அறிக்கை கிடைத்தால் கொழும்பில் உயர் மட்ட மாநாடு ஒன்றினை நடாத்தி தீர்வு கண்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரச அதிபர்கள் கமநல உதவி ஆணையாளர்கள், வெல்லாவெளி, உகண பிரதேச செயலாளர்கள் ஆகியோர் அழைக்கப்படவுள்ளனர். என அமைச்சர் கூறியதாக செல்வராசா எம்.பி. தெரிவித்தார்.

## கன்னங்குடா செல்ல கல்விப்பணிப்பாளருக்குத்தடை

(அரியம்)

கன்னங்குடா மகா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டு விழாவிற்கு பிரதம அதிதியாகச் சென்ற மட்டக்களப்பு வலயக்கல்விப்பணிப்பாளர் ரி.பொன்னம்பலம், கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.பரசுராமன் ஆகியோரை வவுணதீவு பாலத்தில் உள்ள இராணுவத்தினர் செல்ல விடாமல் திருப்பி அனுப்பினர்.

நேற்று கன்னங்குடா மகாவித்தியாலய இல்ல விளையாட்டு விழாவிற்கு மட்டக்களப்பு வலயக் கல்விப்பணிப்பாளர் பிரதம அதிதியாக அழைக்கப்பட்டிருந்தார்.

இவ்விளையாட்டு நிகழ்வில் கலந்து கொள்வதற்காக நேற்றுக்காலை மோட்டார் சைக்கிளில் வலயக்கல்விப் பணிப்பாளர் ரி.பொன்னம்பலம் கோட்டக்கல்விப்பணிப்பாளர் எஸ். பரசுராமனும் சென்ற போது இவர்களின் அடையாள அட்டைகளை பார்த்து விட்டு இராணுவத்தினர் திருப்பி அனுப்பி விட்டனர்.

மட்டக்களப்பு கல்வி வலயத்திலுள்ள தமது கண்காணிப்பில் இயங்கி வரும் கன்னங்குடா மகாவித்தியாலயத்திற்கு செல்வதற்கு வலயக்கல்விப் பணிப்பாளருக்கு அனுமதி வழங்கப் படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் அணைப்பில்
1931 * 06 * 11



ஆண்டவன் அழைப்பில்
2001 * 02 * 21

**அமரர் உயர் திரு. சேரலிஸ் தர்மசேனா**

முல்லை வனம் போல் - உங்கள்
முகம் பார்த்த நாங்கள்
பிள்ளைகள் - உந்தன்
முத்தங்கேட்டு முன்னொரு காலம்
ஏங்கியதுண்டு - ஆனால்
இன்றோடு 31 ஆம் நாள்
சென்றாலும் மறக்கவில்லை
உங்கள் - அழகிய அன்பு
வதனத்தை

இவருடைய ஆத்ம சாந்திக்காக 24.03.2001 அன்று புனித காணிக்கை மாதா ஆலயத்தில் காலை 5:30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.
என்றும் இவருடைய அன்பில் வாடும்.

மனைவி: – மலர் தர்மசேனா
பிள்ளைகள்: – உமா, காமினி, சியாமி, அஜந்தன்

இவ் ஆராதனையில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்: மனைவி- மலர் தர்மசேனா, பயனியர் வீதி, மட்டக்களப்பு.


### கல்வி அமைச்சு....

அனுமதியின்றி செல்வதற்கான ஏற்பாடுகளை செய்து தருவதாக கல்வி அமைச்சர் சுசில்பிரேம ஜெயந்த மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசாவிடம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு பாடசாலைகளை மேற்பார்வை செய்வதற்காகவும் மற்றும் விளையாட்டு விழாக்களில் கலந்து கொள்வதற்காகவும் சென்ற கல்வி அதிகாரிகள் செங்கலடி கறுப்பு பாலம், வலையிறவுப்பாலம் ஆகியவற்றில் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டது தொடர்பாக செல்வராசா எம்.பி. கல்வி அமைச்சரை சந்தித்து பேசியதையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக செல்வராசா எம்.பி. தெரிவித்தார்.

### மட்டு...

ஆங்கங்கே நெருப்புச் சுவாலைகள் தெரிந்தாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 21ம் திகதி விடுதலைப் புலிகளின் மாவீரர் வார நிகழ்வுகள் நடைபெற்ற சமயம் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசமான புலிபாய்ந்தகல் திகிலி வெட்டைப் பிரதேசத்தில் விமானக்குண்டு வீச்சுத்தாக்குதல் இடம் பெற்றது.

தற்போது அன்னை பூபதியின் நினைவு வாரத்தை ஒட்டி இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### களுவாஞ்சி....

அந்தவீட்டுக்கு வந்து அந்த வீட்டாரிடம் நாம் கிரனேட் கொண்டு வந்திருக்கின்றோம் பரிசோதிக்க வேண்டும் என்று அனுமதி கேட்டு இருக்கின்றனர். இவர்கள் இருவரும் மது போதையில் இருந்ததாகவும் தற்செயலாக இந்தக் குண்டு வெடித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. காயமடைந்த யோகநாதன் இராணுவத் துணைப் படையைச் சேர்ந்தவராம் என்று கூறப்படுகின்றது.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பொறுப்பதிகாரி யூ.எச்.டி. ஜெயநாத் மற்றும் குற்றத் தடுப்பு உதவி இன்ஸ்பெக்டர் வி.ஜ.அபூபக்கர் ஆகியோர் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## தூதரக தமிழ் ஊழியர் பதவிநீக்கம்

(நமது நிருபர்)

பாரிஸில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றி வந்த தமிழர் ஒருவர் பதவி நீக்கப்பட்டுள்ளார்.

நடராசா ஜெயபாலா என்னும் மேற்படி நபர் கடந்த 90ஆம் ஆண்டு முதல் தூதரகத்தில் வரவேற்பாளராக பணி புரிந்தார் எனத்தெரிய வருகின்றது.

## சமுர்த்தி உத்தியோகத்தர்கள் விசாரணையின் பின் விடுதலை!

(மூதூர்)

மூதூர் பிரதேச செயலகப்பிரிவில் பணியாற்றும் மூன்று சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நேற்று பொலிசாரால் விசாரணைக் குட்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மூவரையும் மேல் விசாரணைக்காக திருமலை பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு உத்தரவிட்டுள்ளதாக மேற்படி மூவரும் மூதூர் பிரதேசசெயலாளரிடம் எழுத்து மூலம் அறிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த சில நாட்களாக மூதூர் பகுதியைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக திருமலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக உறவினர்கள் முறையீடு செய்துள்ளனர்.

### நெதர்லாந்............

பொதுமக்களின் நிலைப்பாடு தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார்.இதையடுத்து யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி வேலைகள் தொடர்பாகவும் கேட்டறிந்த முதற்செயலாளர் நெதர்லாந்து அரசாங்கத்தினால் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பான விபரங்களைத் தருமாறும் அரசாங்க அதிபரிடம் கேட்டுக் கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் தற்போது அவசரமாக மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பான அறிக்கையொன்றை அரசாங்க அதிபர் அவரிடம் கையளித்துள்ளார்.

இதற்கிடையில் இவர் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளையும் நேரில் சென்று பார்வையிடுவதுடன் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆகியோரையும் நேற்று மாலை தனித்தனியாகச் சந்திக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### யாழ் – குருநகர்........

குறைவாக இருப்பதால் பல சிரமங்களை எதிர்கொண்டுள்ள மீனவர்கள் நேற்று அறிவிக்கப்பட்ட முழுநேரத் தடையால் மேலும் பல கஸ்டங்களை எதிர்நோக்க வேண்டிவரும் என இவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இது இவ்வாறிருக்க குருநகர் கடற்பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் நேற்று முன்தினமிரவு (21.3.2001) மோதல் சம்பவங்கள் இடம் பெற்றதாக யாழ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதன்போது துப்பாக்கிப் பிரயோகமும் எறிகணைத் தாக்குதலும் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலை அடுத்து கடலிலிருந்து படையினர் குருநகரில் மக்கள் வாழும் பகுதியை நோக்கி எறிகணைத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.


**விற்பனைக்கு உண்டு**

மட்டக்களப்பு புனித அந்தோனியார் வீதியில் சகல வசதி யுடன் கூடிய மாடி வீடும் கடை யும் விற்பனைக்குண்டு
36, பிரதான வீதி,
மட்டக்களப்பு.
தொ.பே. 065-23322 Advt.


### ஏப்.24வரை.....

சர்வதேச சமூகத்துக்கும் உணர்த்தும் பொருட்டு நல்லெண்ணவெளிப்பாடாக கடந்த நத்தார் தினமான டிசம்பர் 24ஆம் திகதி ஒரு தலைப்பட்சமாக விடுதலைப்புலிகள் பிரகடனம் செய்த போர் நிறுத்தத்தை மாதம் மாதம் மேலும் நீடித்து அரசும் சாதகமாக நடந்து கொள்ளும் என்று எதிர்பார்ப்பை வெளியிட்ட போதிலும் விடுதலைப்புலிகள் போர் நிறுத்தம் ஒரு "பிரசாரத் தந்திரம்" என்று சந்திரிகா அரசு நிராகரித்துள்ளது.

நோர்வே அரசை முன் நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தைகளை தொடர்வதற்காகவே விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் ஒரு மாதகாலப் போர் நிறுத்தத்தை நீடித்துள்ளார்கள்.

இவ்வாறு புலிகள் தொடர்ந்து போர் நிறுத்தத்தை நீடிப்பதை புலிகளின் பலவீனமாகக் கருதிய அரசு புலிகள் போர் நிறுத்தத்தை ஆரம்பித்து சென்ற வருட நத்தார் காலத்திலிருந்து இன்று வரை புலிகளது போராளிகளைத் தாக்கி வருகின்றது. என மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் முல்லைத்தீவு மற்றும் மன்னார் பிரதேசங்களில் வாழும் ஏழை எளிய தமிழ் மக்களின் பிரதேசங்களில் ரஷியா, இஸ்ரேலியக் குண்டு வீச்சு விமானங்களின் மூலம் குண்டுகளை வீசி அவர்களது வீடுவாசல்களை அழித்தொழித்து வருகின்றது. இவ்வாறான சந்தர்ப்பம் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

இதேவேளை எங்களது சமாதானத்திற்கான இசைவுகளை நோர்வேப் பிரதிநிதியின் மூலம் சந்திரிகா அரசுக்கு மிகத் தெளிவாகத் தெரிவித்துள்ளோம். இனிமேலும் இவ்வாறான போர் நிறுத்த மீறல்களை இலங்கை அரசு தொடருமானால் நாம் எமது போர் நிறுத்தத்தை மேலும் தொடராமல் போரிலிறங்க எமக்கு உரிமை உண்டு எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் கபடத்தனமான போக்குக்கு இந்தியா உட்பட அமெரிக்கா. பிரித்தானிய மற்றும் ஐரோப்பிய நாடுகள் செவிசாய்த்து இலங்கைத் தீவிலுள்ள அப்பாவி தமிழருக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இது முறையிலேயே ஓர் நேர்மையான விடுதலைப்போரை கொச்சைப்படுத்தி அழித்தொழிப்பது ஓர் மனித உரிமை மீறலாகும் எனவும் விடுதலைப்புலிகள் நேற்று வன்னியில் இருந்து விடுத்துள்ள தமதறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.